போன் நெ. 15. விலை 2 அணா REGD No.

# திராவிடநாடு

மலர் 13 | 19—12—54 | இதழ் 25

# அரசியற் கருத்துக்கள்

## [அன்று முதல் இன்று வரை]

[இருதயராஜ் —திருச்சி செயிண்டு ஜோசப் கல்லூரிப் பேராசிரியர்]

மக்கள் பலர் சேர்ந்து கூட்டாக சமூகத்தில் வாழும்போது, அவர்களில் ஒருவனோ அல்லது ஒரு ஸ்தாபனமோ கட்டளையிட, அக்கட்டளைக்கு, அச்சமூகத்தைச் சார்ந்த மற்றவர்கள் அடங்கி நடந்து வந்தால் அம்மனிதனை அல்லது ஸ்தாபனத்தை "அரசாங்கம்" என்று சொல்லுகிறோம்.

இவ்விதம் அதிகாரம் செலுத்தும் அரசாங்கத்தை—அதை நடத்துபவரின் எண்ணிக்கையின் பிரகாரம் வெவ்வேறு பெயரிட்டு அழைக்கிறோம். தனி ஒரு மனிதனின் ஆணையின்கீழ் ஒரு சமூகத்திலுள்ள மக்கள் வாழ்ந்தால், அதை மன்னராட்சி அல்லது முடியாட்சி என்றும், அவ்வித ஆட்சியில் மன்னன் தான்தோன்றித்தனமாகவோ எதேச்சாதிகாரமாகவோ நடந்து கொள்ளாமல் மக்களின் விருப்பப்படி, அவர்களின் பிரதிநிதிகளின் ஆலோசனையின்படி, சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடந்தால் அத்தகைய முடியாட்சியை வரம்புடைய முடியாட்சி என்றும், அரசாங்கம் ஒரு சில பிரபுக்களின் ஆதிக்கத்திலிருந்தால் அதை பிரபுக்களாட்சி என்றும், பணம் படைத்த ஒரு சிலர், தங்கள் சுயநலத்திற்காக ஆட்சியை நடத்தினால் அதை பணக்காரர் ஆட்சி என்றும் பாகுபடுத்திக் கூறலாம். மக்களுக்காக மக்களாலேயே நடத்தப்படும் ஆட்சியை ஜனநாயகம் என்றும் அழைக்கிறோம். ஒருகாலத்தில் ஆதென்ஸ் போன்ற குடியாட்சிகளில் மக்கள் எல்லோருமே ஈடுபட்டு நேரடியாக ஆட்சிபுரிந்தனர். ஆனால் இன்று அது சாத்தியமில்லையாதலால், மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களின்மூலம் ஆட்சியை நடத்திவருகின்றனர். முன்னதை நேர்முக அல்லது தூய ஜனநாயகமென்றும், பிந்தியதை மறைமுக ஜனநாயகமென்றும் சொல்லலாம்.

இம்மாதிரி பலவித ஆட்சி வகைகளும் ஒரே சமயத்திலோ அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள்ளோ தோன்றியவை அல்ல. காலக்கிரமத்தில் அவ்வப்பொழுது ஏற்பட்ட சூழ்நிலைகள், சுற்றுச் சார்புகளின் காரணமாக அரசியற் கருத்துக்கள் அரும்பி அவைகளின் விளைவாக ஆட்சிமுறைகள் வளர்ச்சியுற்று வந்திருக்கின்றன.

ஆதியிலே, மனிதன் தோன்றிய காலத்தில், அவன் தனித்தே வாழ்ந்தான். பிறகு தனிக் குடும்பங்களாக மனிதர்கள் வாழ்ந்தனர். அதன்பின் சிற்சில குடும்பங்கள் ஒன்று சேர்ந்து வாழ்ந்தன. அப்பொழுதெல்லாம் அரசாங்கம் என்று ஒரு அமைப்பு இருந்ததில்லை.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நாகரிக வளர்ச்சிபெற்று வரும்போது மக்கள் தனித்து வாழ்வதைவிட்டுக் கூட்டங்களாக வாழத் தொடங்கினர். நாடோடி வாழ்க்கையைவிட்டு நிலையான வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டு வாழ்ந்தபோதுதான், மக்களிடையே நிலையான ஸ்தாபனங்கள் வளர்ச்சியுறத் தொடங்கின.

இப்படி கூட்டங் கூட்டமாக வாழ்ந்தவர்களுக்கு, கூட்டத்தை சரிவர நடத்தவும் பாதுகாக்கவும் ஒரு தலைவன் தேவைப்பட்டான். சமூகத்தில் பலசாலியாகவும் அறிவாளியாகவும் விளங்கிய ஒருவன் தலைவனாக, காவலனாக, அரசனாக ஆனான். மற்றவர்கள் அவனுக்கு அடங்கி நடக்கத் துவங்கினர். காலக்கிரமத்தில் தலைமை வகிப்பதும் தலைவர்க்குப் பணிந்து நடப்பதும் தலைமுறை தத்துவமாக மாறிற்று. பரம்பரைமுறை ஏற்பட்டது.

பூர்விக மக்கட் சமூகங்களில் சில இந்தக் கூட்டு அமைப்பு நிலையோடு நின்றுவிட்டன. மேலே வளரவில்லை.

ஆனால் இயற்கை வளம் மிகுந்த சில இடங்களில் குடியேறிய மக்கள் மிக்க பொருளை ஈட்டி, சமாதான காலத்துக் கலைகளிலும், போர்க்

கலைகளிலும் தேர்ச்சியுற்று, தங்கள் பலத்தைப் பெருக்கிக்கொண்டு பெரிய சாம்ராஜ்யங்களைத் தோற்றுவித்தனர். நைல்நதி தீரத்தில், கங்கைக் கரையில், மஞ்சளாறு, யாங்ட்ஸி என்னும் ஆறுகள் பாயும் பிரதேசங்களில்தான உலகிலேயே முதலாவதாகச் சாம்ராஜ்யங்கள் தோன்றின.

நாளடைவில் இந்தச் சாம்ராஜ்யங்கள் பலம் பொருந்தியவைகளாக வளர்ந்து பல போர்களில் ஈடுபட்டன. போரிற் சிறைப்பட்டவர்கள் அடிமைகளாக்கப்பட்டனர். இந்த அடிமைகள் தனித்து ஒரு ஏவலாளர் சமூகமாக மாறி ராஜ்யத்தில் வேறுபாடுகளையும் வேற்றுமை உணர்ச்சிகளையும் வளர்த்தனர். ஆளும் பரம்பரை மெலிவுற்ற நேரத்தில் அடிமைகளுக்கும் ஆண்டானுக்கும் ஏற்பட்ட சச்சரவுகளில் சாம்ராஜ்யங்கள் சரிந்துபோயின.

இதுவரை அரசியற் கருத்துக்கள் தோன்றவில்லை. ஆதியில் சில நாடுகளில் எவ்வாறு ராஜ்ய பரிபாலனம் நடந்து வந்தது என்பது மட்டும், புராணங்கள், காவியங்கள், இதிகாசங்கள் இவைகளின் வாயிலாகத் தெரிந்துகொள்ள முடியுமே தவிர, அரசியலைப்பற்றிய தொடர்பான கருத்துக்கள் எங்கும் இருந்ததாகத் தெரியவில்லை.

உதாரணமாக இந்தியாவில் முதல் முதல் அரசியலைப் பற்றிய விஷயங்கள் விளக்கப்பட்டது கி. மு. 600-300-ல் எழுதப்பெற்ற கௌதம, ஆபஸ்தம்ப தரும சூத்திரங்களில் என்று சொல்லலாம். இந் நூல்களில் க்ஷத்திரியர்களுடைய தருமங்களைக் கூறுமிடத்து அரசர்களுடைய கடமைகளும், அவர்களுக்கும் அவர்களுடைய குடிகளுக்கும் இருக்கவேண்டிய உறவு முறைகளும் தனியே எடுத்துக் கூறப்படுகின்றன. அறிவு, கல்வி, நன்னடக்கை முதலிய நற்குணங்கள் வாய்ந்த ஓர் அந்தணனைப் புரோகிதனாகத் தேர்ந்தெடுத்துப் பிறகு அவன் வழிப்படி நடக்க வேண்டியது அரசன் கடமை என்பது இந்நூல்களின் முக்கியக் கருத்துகளில் ஒன்று.

இவ்விதமே தமிழ்நாட்டு அரசியலைப் பற்றித் தெளிவாக திருக்குறளில் பொருட்பால் என்னும் பகுதியிலும், இன்னும் சங்க இலக்கியங்களிலும், காவியங்களிலும் காண்கிறோம். இந் நூல்களிலிருந்து தமிழ் நாட்டில் முற்காலத்தில் நடைபெற்றது மன்னராட்சி என்றும், குடிகளுக்கு மன்னனே உயிர் என்னும் கருத்து இருந்ததாகவும் அறியலாம். மன்னருக்கு ஆலோசனை சொல்லி நல்ல வழியில் அவனைக் கொண்டு செலுத்தும் பொறுப்பு அமைச்சரையே சார்ந்திருந்தது. நாட்டில் வாழும் குடிகளுள் நல்லறிவும் நல்லொழுக்கமும் வாய்ந்தவர்களே மன்னர்களால் அமைச்சர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவ்வாறு அரசன் ஆராய்ந்தெடுத்த அமைச்சர்கள், எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருளை ஆராய்ந்து தெளிந்து, நேர்மையாக மன்னனிடம் எடுத்துரைப்பார்கள். அரசன் தம் கொள்கையைக் கொள்ளுவானோ அன்றித் தள்ளுவானோ என்று ஐயுற்று நெஞ்சம் குலைய மாட்டார்கள். இவ்வாறு இடித்துரைக்கும் அமைச்சரைத் துணைக்கொண்ட மன்னனை எவரும் கெடுக்க முடியாது என்றும், அன்னாரைத் துணைக்கொள்ளாத அரசன் நெறியல்லா நெறிச்சென்று கெடுவான் என்றும் வள்ளுவர் கூறுகிறார் (447-448) அறத்தை அடிப்படையாகக் கொண்ட அரசு நல்லமைச்சரை நாடும்; மறத்தை அடிப்படையாகக் கொண்ட அரசு போலி அமைச்சரைப் பொறுக்கிக் கொள்ளும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இவ்விதம் சிற்சில நாடுகளில் ஏதோ அரசியலுக்கு அடுத்த சில நடைமுறைக் காரியங்களை விவரித்தும் ஆளுபவருக்கும், குடிகளுக்கும் நன்னெறி புகட்டக்கூடிய விதத்தில் நல்லுரைகளை எடுத்துக் காட்டக்கூடிய நூல்களும் இருந்தனவே தவிர, அரசியற் கருத்துகள் ஆராயப்பெற்று தொகுக்கப் படவில்லை.

முதன் முதலாக அரசியற் கருத்துக்கள் ஆராயப்பெற்று தொகுக்கப்பட்டது கிரீஸ் தேசத்தில்தான். கிரேக்கர்கள் தர்க்க சாஸ்திரத்தைக் கண்டவர்கள். அறிவாய்வு (Reasoning) முறைகளைப் பயன்படுத்தி அரசியற் கருத்துக்களை அவர்கள்தான் தோற்றுவித்தனர். அதிலிருந்துதான் மேனாட்டில் அரசியல் துறையில் மேலும் பல ஆராய்ச்சிகளும் புதுக் கருத்துக்களும் உண்டாயின. ஆக இன்று நாம் காணும் அரசியற் கருத்துக்களெல்லாம் ஆரம்பத்தில் கிரேக்கர்களுடைய எண்ணங்களிலிருந்து எழுந்தவைகள்தாம்.

கிரேக்கர்களின் அரசியற் கருத்துகளை அறிய வேண்டுமானால், முதலில் கிரேக்கர்களைப் பற்றியும் அவர்கள் நாட்டைப்பற்றியும் நாம் அறிந்து கொள்ளவேண்டும். கிரேக்க அறிஞர்களின் கருத்துக்களை நாம் அறிந்துகொள்ள முயற்சிக்கு முன்னர், அவர்களுடைய வாழ்க்கைக்குப் பின்னணியாயிருந்த கிரேக்க நாட்டின் நிலைமையைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.

கிரீஸில் ஐந்தாவது நூற்றாண்டுக்குப் பிறகுதான் அரசியற் கருத்துகள் தோன்றின. அந்த நூற்றாண்டில் கிரீஸ் தேசம் சிறு சிறு நகரங்களாகப் பிரிந்திருந்தது. ஒவ்வொரு நகரமும் தனித்தனி ராஜ்யமாக சுதந்தரமாக வாழ்ந்து வந்தது. ஒவ்வொன்றிலும் தனியான அரசியல் ஸ்தாபனங்கள், சட்டதிட்டங்கள், ராணுவம் முதலியவை இருந்தன. அவை ஒவ்வொன்றும் தன்னுடைய சுதந்தரத்தை உயிரைப்போல் போற்றிக் காத்துவந்தன.

இவ்விதம் பலராஜ்யங்கள் அங்கு இருந்த போதிலும் அவைகளில் முக்கியமானவைகள் மூன்று: ஆதென்ஸ், ஸ்பாடா, கோரிந்த்—என்பவை. அவைகளிலே முதன்மையானது ஆதென்ஸ் நகரம்.

### சாக்ரட்டிஸ்

கி. மு. ஐந்தாவது நூற்றாண்டில் ஆதென்ஸ் நகரத்தில் தோன்றினார். மேனாட்டு அரசியல் சிந்தனையாளர்களெல்லோருக்கும் முதல்வர் அவர். அவர் எதைப்பற்றியும் ஒன்றும் எழுதி வைத்துவிட்டுப் போகவில்லை, ஆனால் அவர் ஒரு "சிந்தனைப் பட்டறை" அதிலிருந்து அநேக கருத்துக்கள் வெளிவந்தன.

அவர் மேடையேறிப் பிரசங்கம் செய்ததில்லை. ஆனால் அவர் பேச்சைக் கேட்க எப்பொழுதும் மக்கள் அவரைச்சூழ்ந்திருந்தார்கள். அவர் அரசியல்வாதியல்லவாயினும், அவருடைய கருத்துக்கள் இன்றும் அரசியல் நிபுணர்களால் போற்றப்படுகின்றன. அவரைப் பார்த்தவர்கள் அவர் அழகுள்ளவர் அல்ல—குரூபி என்றுங்கூடக் கூறினர். ஆனால் அவரைப்போல் அழகை அனுபவித்

திருக்கமுடியாது வேறு எவராலும். அப்படி அவர் அனுபவித்தது ஐம்புலன்களினாலல்ல; உள்ளத்தால்! சீலமுள்ள வாழ்க்கையை அவர் போற்றினார். அவரையே இளைஞர்களுடைய சீலத்தைக் கெடுப்பவரென்று குற்றஞ்சாட்டினர், அதிகார பீடத்திலே அப்பொழுது அமர்ந்திருந்தவர்கள். மரணத்தைப் புன்சிரிப்போடு ஏற்றுக் கொண்ட ஒரு சில உலக உத்தமர்களில் அவரும்ஒருவர். அவர்சிறையிலே சாந்தியைக்கண்டார். மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை நம்மை மாட்டிட நினைக்கும் சிறைச்சாலை என்றே அவர் நினைத்தார். அவர் மரணத்திலே விடுதலையைக் கண்டார்.

தீமைக்குப் பதில் நன்மையே செய்யவேண்டும், ஒவ்வொருவரும் தனது கடமையை—தனக்கென்று ஏற்பட்ட வேலையைச்செய்துமுடிக்க வேண்டும். மரணம் இவ்வுலகவாழ்க்கையிலேயிருந்துவிடுதலை தருவது, என்று எண்ணினார். ஐயம், வினா, விடை, அறிவுரை என்னும் முறையைப் பின்பற்றி ஆதென்ஸ் நகர இளைஞர்களுக்கு அறிவு புகட்டினார். பழைய சம்பிரதாயங்களையும் கோட்பாடுகளையும் அப்படியே ஏற்றுக்கொள்ளாது, அவைகளை அறிவுத்தராசில் ஏற்றி உண்மையைக்காண வேண்டும் என்ற அறிவுப்பசியை மக்களிடையே ஏற்படுத்தி, அறிவுத்துறையில் தெளிவு உண்டாக்கப் பாடுபட்டார். ஆதென்ஸில் அப்பொழுது நடைபெற்றுவந்த ஜனநாயக ஆட்சியைக் கண்டித்தார். "ஜனநாயகம் மக்களிடையே பொய்மையான சமத்துவத்தையே நிலைநாட்டுகின்றது" என்றார். உயர்குடியில் பிறந்தவர்கள் தான் ஆளப் பிறந்தவர்கள் என்ற கருத்தைப் போதித்தார்.

சட்டத்தை மதிக்கவேண்டும் அதற்கு உட்பட்டு ஆள்பவரும் சரி ஆளப்படுபவரும் சரி நடக்க வேண்டும் என்றார். இவ்விதம் அரசியல் கருத்துகளுக்கு அடிப்படையைக் கற்பித்தார். ஒவ்வொருவனும் தன் மனச்சாட்சிக்குமாறின்றி நல்லது கெட்டது-அறிந்து நல்லதையே செய்யவேண்டும் என்று அவர் சொல்லியபோதிலும், ஒருவன் தான் சரியானவழியில் நடப்பதாகக் கருதினாலும், அரசாங்கம் தண்டனை விதித்தால் அதை ஏற்றுக் கொள்ளுவதே முறை என்றும் கற்பித்தார். அது போலவே அவர் இளைஞர்களுக்கு, தனக்குச் சரியென்று தோன்றிய சன்மார்க்க வழியைப் போதித்து வந்தார் என்ற காரணத்திற்காக அரசாங்கம் அவரை, இளைஞர்களைக் கெடுப்பதாகக் குற்றஞ்சாட்டி மரண தண்டனைக்குள்ளாக்கியபோது அதை மனமுவந்து ஏற்றுக் கொண்டார். ஆக அவர் போதித்ததை தன் நடத்தையில் செய்தும் காட்டினார். போதனையையே சாதனையாகக் காட்டியதில் தான் சாக்ரட்டீஸின் முக்கியத்துவம் அடங்கியிருக்கிறது.

## பிளேட்டோ

மக்களாட்சி மலர்ந்ததாகச் சொல்லப்பட்ட ஆதென்ஸ் நகரில், இவ்வாறு சாக்ரட்டீஸ் கொலையுண்டது அவருடைய மாணவரான பிளேட்டோவின் மனதைப்புண்படுத்தியது. ஜனநாயகத்தின் பேரால் நடந்த இந்த அக்கிரமம் பிளேட்டோவுக்கு ஜனநாயக ஆட்சியின்மேல் வெறுப்பை உண்டாக்கியது, ஜனநாயகம் என்பது பாமரர் ஆட்சி என்ற முடிவுக்கு வந்தார்.

அறத்தையும் நீதியையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு இலட்சிய அரசு எப்படி இருக்கவேண்டும் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டார் பிளேட்டோ. சாக்ரட்டீஸ் அவனவன் மனச்சாட்சிக்கு எது உண்மை என்று பட்டதோ அதுவே உண்மை எனப்போதித்தார். ஆனால் பிளேட்டோ எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சில உண்மைகளும் இருக்கின்றன என்ற நம்பிக்கையிலிருந்து தன் ஆராய்ச்சியைத் துவக்கினார்.

பிளேட்டோவின் நூல்களில் 'குடியரசு' என்பது முதன்மையானது. அதில் நீதியை நிலையாகக் கொண்ட ஒரு இலட்சிய அரசைப் பற்றிக் கூறுகிறார். ஒரு அரசுக்கும் ஒரு தனிப்பட்ட மனிதனுக்குமுள்ள ஒற்றுமைப் பொருத்தத்தை எடுத்துக்காட்டி, மனிதனுக்கு எப்படி அறநெறி அவசியமோ, உண்மையைக் கடைப்பிடித்துத் தவறைத் தவிர்க்க வேண்டுமோ அப்படியே ஒரு அரசாங்கமும் உண்மை வழியில் நடந்து தவறான போக்கை விட்டு நீதியின் வழியில் சென்றால் தான் அது நல்ல ஆட்சியாகும் என்று கூறுகிறார்.

மனிதனுக்குப் பல ஆசைகளும் அவைகளை யொட்டிய தேவைகளும் உண்டாகின்றன. ஆசைகளை நிறைவேற்றித் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்கு ஒருவன் மற்ற மனிதர்களோடு கூட்டு வாழ்க்கை நடத்தினால்தான் அவை சாத்தியமாகும். தன்னுடைய தேவைகளை எல்லாம் ஒருவன் தானே தேடிக்கொள்வது சாத்தியமில்லை. சமூகத்தில் ஒன்றித்து வாழ்ந்தால்தான் மற்றவர்களின் முயற்சியைத் துணைக்கொண்டு சுலபமாக வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளலாம். இதுவே அரசு தோன்றுவதற்கு முதற்காரணம் என்றார்.

ஒரு அரசில் உள்ள மக்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்தார். (1) உற்பத்தியாளர்கள்—இவர்கள் மக்கட் தேவைகளைப் பூர்த்திசெய்வார்கள். உழவர்கள், தச்சர்கள், கொல்லர்கள், கொத்தர்கள் இவர்களெல்லாம் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள். (2) மறவர்கள்—நாட்டையும் நாட்டில் வதியும் மக்களையும் தங்கள் போர்த்திறனால் காப்பவர்கள். (3) அறிஞர்கள்—இவர்கள் தான் ஆளுபவர்கள், சமூகத்தின் பொது நலனைக் கவனிப்பவர்கள்.

இந்த மூன்று வகுப்பையும் சேர்ந்தவர்கள் தத்தம் தகுதிக்குத் தக்கவாறு தங்கள் கடமையைச் செய்யவேண்டும். அதிலேதான் நீதி அடங்கியிருக்கிறது. ஒருவன் நீதிமான் என்றால் அவன் தன் கடமையினின்றும் வழுவாமல் நடப்பவன் என்று அர்த்தம். ஒரு அரசு நீதியின் அடிப்படையில் அமைந்திருக்கவேண்டும் என்று பிளேட்டோ கூறும்போது, மக்களனைவரும் தங்கள் தகுதிக்கேற்பக் கடமைகளை நிறைவேற்றவேண்டுமென்றுதான் கூறுகிறார்.

பிளேட்டோ மக்களாட்சியைக் கண்டு மருண்டார். மக்களாட்சி ஆதென்ஸில் நடந்தபோது மகளிரும் அடிமைகளும் தவிர மற்

## வருந்துகிறோம்

நமது நண்பர் நடிப்புப் புலவர் **கே. ஆர். இராமசாமி** அவர்களின் தாயார் அவர்கள் கடந்த வியாழன் அன்று அம்பாசமுத்திரத்தில் (குடந்தை) காலமானார் எனும் செய்தி அறிய வருந்துகிறோம். சில நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்து இயற்கை எய்திய தாயாரின் பிரிவால் வருந்தும் கே. ஆர். ஆருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

றெல்லா மக்களும் ஆட்சியில் பங்கு கொண்டிருந்தனர். அதனால் திறமையற்றவரும் தகுதியற்றவரும் பதவிக்கு வந்து ஆட்சிபுரிந்தனர். அதன் விளைவாக நல்லாட்சி கிடைக்கவில்லை என்பது மட்டுமல்ல, தீமைகளும் நேர்ந்தன. மக்களாட்சியில்தான் சாக்ரட்டீஸ் தண்டிக்கப்பட்டார். இதை நினைவிற் கொண்டே பிளேட்டோ ஒரு அரசு நீதியை அடிப்படையாகக்கொள்ள வேண்டும்; அவரவர் தமது தகுதிக்கேற்ற அந்தஸ்தில் தம் கடமையை நிறைவேற்றுவதே நீதியாகும் என்றார்.

மரத்தினால் மேசை நாற்காலி செய்வதற்கு உபயோகப்படும் உளியைக்கொண்டு மேசை நாற்காலிகளை உடைத்தெறிய உபயோகித்தால், அந்த உளியைத் தவறான வழியில் உபயோகிக்கிறோம் என்றுதான் அர்த்தம். அதுபோலவே, போர்வீரனாக இருக்கத் தகுதியுள்ள ஒருவன் அறிவாளி அமரவேண்டிய ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தால், அவனிடம் நல்லதை எப்படி எதிர்பார்க்கமுடியும்? அப்படி அவன் ஆள முற்படுவது தவறானதுமட்டுமல்ல, பிளேட்டோவின் கருத்துப்பிரகாரம் அது அநீதியுங் கூட. ஏனெனில் அவன் தனக்கு ஏற்பட்ட வேலையைச் செய்யாதது ஒரு தவறு. தன்னைவிடச் சிறந்தவனை, அதிக தகுதியுடையவனை, அறிவாளியை ஆட்சிப் பீடத்தில் அமருவதினின்று தடுத்துவிட்டது மற்றொரு குற்றம்.

மக்களாட்சியில், தகுதியும் திறமையும் அறிவும் படைத்தவர்கள் தங்களுக்குரிய வேலையைச் செய்யமுடிவதில்லை. தகுதியற்றவர்கள், இலாயக்கில்லாதவர்கள் பொறுப்புள்ள பதவியில் ஏற்றப்படுகிறார்கள். அதனால் மக்களுக்கு நல்லாட்சி கிடைப்பதற்கு வழியில்லை. அதனாலேயே, பிளேட்டோ மக்களாட்சியைக் கண்டித்தார்.

உற்பத்தியாளர், மறவர், அறிஞர் ஆகிய மூன்று வகுப்பினரும் தத்தம் வேலையைக் கவனித்துப் பிறருடைய அலுவல்களில் தலையிடாமல் நடப்பதே சமூகநீதி எனப்படும். இந்த நீதிதான் சமூகத்தைப் பிணைக்கும் இணைப்புச் சங்கிலி. இந்த நீதியின்படி மக்கள் செயலாற்றினால்தான் சுயநலம் தலைகாட்டாது. பொதுநலத்துக்காக எல்லோரும் பாடுபடுவார்கள்.

(தொடரும்)

# ★ "கான மயிலாட!" ★

**"பிறரைக் 'காப்பி' அடிக்கக்கூடாது. அவர்களிடமுள்ள நல்ல குணங்களை நாம் அறிய முபற்சிக்க வேண்டுமேயொழிய, நடை உடை பாவனைகளிலும் அவர்களை 'காப்பி' அடிக்கக்கூடாது. இது, நம்மை, அவர்களுடைய அடிமையாக்கும்"**

*

கட்டாக்கில், இந்தியப் பிரதமர், சிந்திய சிந்தனை முத்து! பிறரைப் போல நடக்க முயன்று, அவர்கள் சென்ற வழியிலேயே செல்வது சாத்தியம் அல்ல என்பதை விளக்க, இந்த அறிவுரையை வழங்கியுள்ளார். அன்பர் நேருவுக்கு கம்யூனிஸ்டுகளைத் தாக்க, நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது, சில மாதங்களாக! சீனாவுக்குச் சென்று வந்தாரல்லவா? அது முதல், இந்தியக் கம்யூனிஸ்டுகள் மீது புதிய பாணங்களைப் பூட்டுகிறார்! அங்கேயுள்ள கம்யூனிஸ்டுகள், தமது நாட்டிற்கேற்ப நடக்கும்போது, நீங்கள் ஏன் ரஷ்யாவையும் சீனாவையும் 'காப்பி' அடிக்க வேண்டுமெனக் கேட்கிறார்!! இங்குள்ள கம்யூனிஸ்டு 'காம்ரேட்'கள் எந்த மாலெங்கோவையும், மாசேதுங்கையும் வழிகாட்டிகளாக நினைக்கின்றனரோ, அதே தலைவர்களின் பாராட்டுதலைப் பெற்றுக் கொண்டே, இந்த அறிவுரையை வழங்குகிறார்!!!

பாபம், நண்பர்கள் என்ன செய்வார்கள்? பண்டிதர் அவர்களின் பாராட்டுதலைப் பெறும் காட்சியையும் காணுகிறார்கள்! அதே சமயத்தில், அவர்களது குரலாக விளங்கும் தங்களைத் தாக்கும் இவரையும் நினைக்கிறார்கள். சிறமுடியுமா! — பாய முடியுமா!— திகைக்கிறார்கள். சிக்கலான, கட்டம்தான். பண்டிதர் சீனாமீதும் ரஷ்யாமீதும் கணைகளைப் பூட்டினால், வழக்கமான பல்லவியை புது முறுக்கோடு வீசிடப் புறப்படலாம். அவரோ, அவர்களைக் கட்டியணைக்கிறார், ஓர் புறம்—கணைகளைப் பூட்டுகிறார், இன்னோர் புறம். அதன் ஒரு காட்சியாகவே மேற்கண்ட அறிவுரையை வழங்குகிறார்.

நேருவின் வாயிலிருந்து வந்தது என்பதற்காக, அதனை அலட்சியம் செய்ய வேண்டுமெனக் கூறவில்லை, நாம். கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி, நாட்டியம் செய்யப் புறப்படுவது நல்லோரின் நகைப்புக்குரிய செயல்! அதே போல வான்கோழியின் நடையை வண்ணமயில் கற்றுக்கொள்ள நினைப்பதும் பேதைமையாகும்!! ஊர்புகழும் நட்சத்திரம் ஒய்யார நடைபோடுகிறாள் என்பதற்காக, வீட்டரசியும் விழியை வீசிக்கொண்டு புறப்பட்டு விடக்கூடாது. கேலி பிறக்கும்! விஞ்ஞான விளைவுகளை வழங்கியது, மேற்கத்திய நாடு. அதற்காக, அரிசி உணவு கூடாது — அவர்களைப் போல ரொட்டியும் வெண்ணெயுமே உணவாக்கிக் கொள்ளப் பழக வேண்டும்—'சூட்'டும் 'கோட்'டுமே சொந்த உடையாக வேண்டும்—உடையும் நடையும் அவர்களைப் போலவே இருக்க வேண்டும் என்று ஆட்டம் போட முயல்வது ஆபத்து; அநாகரீகம். இதனையே அன்பர் நேரு, 'காப்பி' அடிப்பது எனக் குறிப்பிட்டு, அது கூடாது எனச் செப்பி, நல்லவைகளை நமக்கேற்ற வகையில் மாற்றிக் கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறார். அவர் யாரை மனதில் வைத்து இதனைச் சொன்னாரோ, அந்தக் கம்யூனிஸ்டுத்தோழர்களுக்கு, இந்த அறிவுரையை எல்லோரும்சொல்லி வருகிறார்கள். கொள்ளுவதும் தள்ளுவதும் அவர்கள் இஷ்டம்! ஆனால், இந்த அரிய போதனையைத் தெரிவிக்க முன் வந்தாரே அந்தப் பண்டித நேரு அவர்களை— நாம் கேட்க முடியாது. ஆனால், அவர் செய்யும் காரியங்கள் அனைத்துக்கும் தலையாட்டும் தம்பிரான்களாகப் பலர் இருக்கின்றனரே அவர்களைக் கேட்கிறோம். நல்ல புத்திமதிதான். ஆனால், பிறர் விஷயத்தில் பிறக்கும் இந்த உபதேசம், சொந்த விஷயத்தில் ஏன் இல்லாமலிருக்கிறது? சகோதரி விசயலட்சுமியார், இலங்கையில் இன்னொருவருடன் கைகோர்த்து நடனமாட அனுமதிக்கலாமா! ஆங்காங்கும் 'கோப்பை'களுடன் அமர்ந்திருக்கச் செய்யலாமா!! அது, 'காப்பி' அடிப்பதா? இந்தியப் பண்பாடா?

★

# "எல்லோருக்கும் வேலை!"

வேலையில்லை! வேலையில்லை!!

சாகிறேன்—வேலையில்லை.

படித்தேன்—வேலையில்லை.

அலையாத இடமில்லை — ஆனாலும், வேலை கிடைக்கவில்லை!!

*

"வேலையில்லை என்பது, வீண் கூச்சல். இவ்வளவு பெரிய நிலபாகத்தில் செய்வதற்கு வேலையா இல்லாமலிருக்கிறது? எல்லோரும் மேஜை நாற்காலியில் உட்கார்ந்தபடியே சாப்பிட நினைத்தால் முடியுமா? படித்தவர்கள், தொழில் செய்வதை, அகௌரவம் என்று நினைக்கக் கூடாது! கிராமங்களுக்குச் செல்ல வேண்டும்—ஏர் கலப்பையைப் பிடிக்க வேண்டும்—தச்சுத் தொழிலைச் செய்ய வேண்டும் — ஏதாவது ஒரு கைத் தொழிலில் ஈடுபட வேண்டும்"

*

குமுறல்! கோலோச்சுபவர்கள் தரும் பதில்!!—இரண்டினையும், நாட்டோர், அறிவர். எல்லோரும் உயர்ந்த உத்தியோகங்களை நாடுவதாலேயே, வேலையில்லை எனும் விசித்திரவாதம் எழுப்பப் படுகிறது, பலரால்! அப்படியின்றி, அனைவரும் ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபட்டால், வேலையில்லாக் குறை போகும் என்பது அவர்கள் பதில்!! அப்படி அவர்கள் காட்டும் தொழில் எது தெரியுமா? தச்சுத் தொழில்! சலவைத் தொழில்! செக்காட்டுவது! ஏர் கலப்பை பிடிப்பது! தறித்தொழில்! இப்படி. இதனால், வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்து விடுமாம். சுமார் 15 கோடி மக்களுக்கு, இந்தத் தொழில்கள் மூலம், பரிகாரம் தேட முடியுமென்று நினைப்பதும்—அவ்வண்ணம் பேசுவதும், சாத்யமானதல்ல. நிச்சயம், நடைபெற முடியாது. ஏனெனில் இந்தத் தொழில்கள் மட்டுமின்றி, இன்னும் பல தொழில்களைச் செய்யக் கூடிய மக்களிருக்கிறார்கள் — நிறைய! அவர்களுக்கு வேலை தருவதென்றால், பலவிதமான ஆலைகள் தேவைப் படுகின்றன. அந்த ஆலைகள், உண்டா, இங்கே! இல்லை! இல்லை!!

*

அண்மையில், டில்லி அமைச்சர் தேஷ்முக் செப்பியிருக்கிறார், "இன்னும் பத்தாண்டுகளில், எல்லோருக்கும் வேலை கிடைக்கச் செய்து விடுவோம்", என்பதாக. இதனையே, பண்டித நேருவும், ஆவலோடு சொல்லி வருகிறார். கனவு, பலிக்கட்டும்! அப்படி, எல்லோருக்கும் வேலை கிடைத்து விட்டதென்றால், அவர்களுடைய நிலைமை எப்படியிருக்கும்? இதற்கான பதிலை, ஒருவரும் கூறவில்லை! இன்று, இங்கே, பல தொழில்களில், பலர் பணி புரிகிறார்கள். அவர்களுடைய நிலையும் பலவிதமாக இருக்கிறது. சர்க்காரில் பணியாற்றும் ஒரு உத்யோகஸ்தருக்கு வேலையிலிருந்து விடுதலை கிடைத்ததும், 'பென்ஷன்', கிடைக்கிறது! கம்பெனிகள் சிலவற்றில் வேலை பார்ப்பவர்களுக்கு, வேலையை விட்டு விலகும் போது, ஏதோ கொஞ்சம் பணம், சேர்த்துத் தரப்படுகிறது! ஆனால், நாட்டின் முதுகெலும்பு போலுள்ள விவசாயத்திலும், கைத் தறித்தொழிலிலும், இது போன்ற இன்னும் சில தொழில்களிலும் ஈடுபட்டிருப்போருக்கு, அந்திய காலத்தில் தரப்படுவதென்ன? ஏமாற்றம் தான்! கைகாலை அசைக்க முடியாத நிலைக்கு வரும் கருப்பன், உதவிக்குத் தன் மகனின் உழைப்பைத்தான் எதிர்பார்க்கிறான்! வேலை செய்ய இயலாத வேலனை, எந்த விவசாயியும் வேலைக்கு வைத்துக் கொள்வதில்லை!! இதற்குப் பரிகாரம் என்ன?

எல்லோருக்கும் வேலை கொடுத்து விடுகிறோம்!

அவர்களுடைய அந்திய காலத்தில், என்ன செய்யப் போகிறோம்?

அதுமட்டுமல்ல, வேலைசெய்வோரிடையிலே, இன்றே ஏராளமான வேலை நிறுத்தங்கள் நடைபெறுவதைக் காண்கிறோம். இதே நிலை, பிறகும், ஏற்படாமலா இருக்கும் — இப்போதிருப்பது போலவே, சமுதாயம் இருந்தால்!!

பலருக்கு, இயற்கையாக ஏற்படும் இந்த ஐயங்கள்.

அவர்களுக்கு, இதோ ஒரு குடும்பத்தை அறிமுகப்படுத்துகிறோம். இது, ஒரு ரஷ்யக் குடும்பம்!

யெகோர் ஸொட்டோவின் குடும்பம். சர்வ சாதாரணமானது தான்!

அவரும் அவரது புதல்வர் புதல்விகளில் வயது வந்தவர்கள் யாவருமே வேலை செய்து வருகிறார்கள். வேலை பெறும் உரிமையை அவர்கள் அனைவருக்கும் சோவியத் அரசியல் சட்டம் உத்திரவாதம் செய்து தருகிறது. "சோவியத் யூனியன் பிரஜைகள் அனைவரும் வேலை செய்யும் உரிமையுடையவர்களாவர். அதாவது, உத்திரவாதமான வேலையைப் பெறும் உரிமையுடையவர்கள்," என சோவியத் யூனியனின் அரசியல் சட்ட 118 வது விதி கூறுகிறது.

அங்கே, வேலையில்லாத் திண்டாட்டம் அறவே ஒழித்துக் கட்டப்பட்டு 25 ஆண்டுகளாகிவிட்டன. ஒவ்வொரு சோவியத் பிரஜையும் அவரது இச்சைக்கும் திறமைக்கும் நடைமுறை அனுபவத்திற்கும் அறிவுக்கும் தக்கதொரு வேலையைப் பெற முடியும்!

இதனை, ஷிக்கோவ் எனும் ஒரு பிரசித்தி பெற்ற கட்டிடத் தொழிலாளி கூறுகிறார்:-

"சோவியத்நாட்டின் ஆரம்பஆண்டுகளிலே நான் ஒரு இளைஞனாக இருந்தேன். விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன் நான். கொஞ்ச காலம் நான் இடையனாகவும், விவசாயத் தொழிலாளியாகவும் வேலை செய்திருக்கிறேன். பின்னர் உள்நாட்டு யுத்தத்திலும் அன்னியத் தலையீட்டாளர்களை எதிர்த்து நடந்த யுத்தத்திலும் வெற்றிகண்டு, எங்கள் சுதந்திரத்தின் மீதும் சுயேச்சையான வாழ்வின் மீதும் தாக்குதல் தொடுத்தவர்களை முறியடித்துவிட்டு, யுத்தத்தால் ஏற்பட்ட பயங்கர அழிவிலிருந்து வெளி வந்து முன்னேறத் தொடங்கிய ஆண்டிலிருந்து நான் ஒரு தொழிலாளியாக செயல்புரிந்து வருகிறேன்.

இளைஞனாக இருக்கும்போதே நான் மாஸ்கோ நகருக்குச் சென்று ஒரு கட்டிடத் தொழிலாளியாக வேலை செய்யத் தொடங்கினேன். என் தேசத்தின் தலைநகரான மாஸ்கோ என் கண்முன்னே நாளொரு மேனியாகவளர்ந்து உயர்ந்தது. புத்தம் புது இயந்திரத் தொழில் நிலையங்களும் பள்ளிக்கூடங்களும் ஆஸ்பத்திரிகளும் தியேட்டர்களும் நூற்றுக் கணக்கில் கட்டியெழுப்பப்பட்டன. வேலையின்றி இருந்த கட்டிடத் தொழிலாளர்கள் அனைவருக்கும் வேலை கிடைத்தது. ஒரு பெரிய வீட்டைக் கட்டிக் கொண்டிருந்த இடத்திற்கு வந்து வேலைசெய்யத் தொடங்கிய அந் நாளை நான் என்றும் மறவேன், **எங்கள் நாட்டிலே வேலையில்லாத்**

திண்டாட்டம் அறவே ஒழிக்கப்பட்டு 25-ஆண்டுகளாகிவிட்டன. சோவியத் ஆட்சி நாட்டிலுள்ளவர் ஒவ்வொரு வரும் வேலை செய்யும் உரிமையுடையவரெனப் பிரகடனம் செய்ததோடல்லாமல், அவரவரும் அவரது திறமைக்கும் இச்சைக்கும் அறிவுக்கும் தக்கதொரு வேலையைப் பெறுவதற்கான சாத்தியப்பாட்டையும் உத்திரவாதம் செய்துகொடுத்தது. சுதந்திரமாக நேர்மையுடன் பிரயாசை எடுத்து உழைப்பதின் மூலமே எவரும் எங்கள் நாட்டில் உயர் நிலை பெறமுடியும், பெயரும் புகழும் மதிப்பும் பெற முடியும்''

''எல்லோருக்கும் வேலை'', என்கிற நிலைமை உண்டானது மட்டுமல்ல, ''எல்லோரும் வாழ வேண்டும்'' என்கிற உயரிய நோக்கமும் அங்கே இருக்கிறது. இந்த நோக்கம் எப்படி, அங்கே நிறை வேற்றப்படுகிறது — அதற்கு, ''சோவியத்நாடு''. வழங்கும் பதில் இதுதான்:-

''தேசத்தின் மக்கள் அனைவரும் சரிநிகர் சமமானவர்களாய் இருக்கவேண்டும்—இது மனித குலத்தின் மிகச் சிறந்த சிந்தனையாளர்கள் பல நூறு ஆண்டுகளாய் கண்டுவந்த இலட்சியக் கனவுகளில் ஒன்று. சோவியத் யூனியனில் இக் கனவு ஒரு யதார்த்த உண்மையாகிவிட்டது. சோவியத் பிரஜைகளிடையே வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் சமத்துவம் நிலவுகிறது.

இந்தச் சமத்துவம் எவ்வெவ் வகையில் பிரதிபலிக்கிறது? நடைமுறையில் அது எவ்வாறு இயங்குகிறது?

தேசிய இனம் அல்லது வர்ண இனம் என்ற வேற்றுமையின்றி சோவியத் நாட்டின் பிரஜைகள் அனைவரும் உரிமைகளைப் பெற்றுள்ளனர். இதன் பொருள் என்ன? ஒவ்வொருவரும்-எந்த தேசிய இனத்தவராயினும்—தேர்தல்களிலே வாக்களிப்பதற்கும் அரசாங்க அதிகார உறுப்புகளான உழைப்பாளி மக்கள் பிரதிநிதி சோவியத்துகளின் தேர்தல்களில் அபேட்சகராகப் போட்டியிடுவதற்கும் உரிமை பெற்றிருக்கிறார் என்பதே இதன் பொருள்.

சோவியத் நாட்டின் பெண்களும் வாழ்வின் சகல துறைகளிலும் ஆண்களுடன் சரிசமமான உரிமைகளைப் பெற்றுள்ளனர். ஆண்களுடன் சம அந்தஸ்துடன் நின்று, அவர்கள் சோவியத் அரசின் நிர்வாகத்தில் பங்கெடுத்துக் கொள்கின்றனர். சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களில் 348 பெண்கள் உள்ளனர்.

சோவியத் பிரஜைகள் அனைவரும் அவர்களது சென்றகால நிகழ்கால வேலைகளின் அடிப்படையிலே எந்த வித வேறுபாடுமின்றி சம உரிமைகள் பெற்றிருக்கிறார்கள்.

சோவியத் பிரஜைகளிடையே நிலவும் இந்த சமத்துவம் வேலை செய்வதற்கும், ஓய்வு பெறுவதற்கும், கல்வி கற்பதற்கும், முதிய வயதிலும் வேலை செய்யும் சக்தியை இழக்கும் போதும் வசதிகள் பெறுவதற்கும் அவர்களுக்குள்ள சம உரிமைகளிலே காணக் கிடக்கிறது. இந்த உரிமைகள் யாவும் சோவியத் அரசால் உத்திரவாதம் செய்யப்படுகின்றன. உதாரணமாக வேலை செய்யும் உரிமையை எடுத்துக் கொள்வோம். சோஷலிஸ்ட் தேசப் பொருளாதாரம் ஒருமித்த ஒரு அரசாங்கத் திட்டத்தின் அடிப்படையிலே வளர்த்து உயர்த்தப்படுகிறது-தங்கு தடையின்றி அது உயர்ந்தோங்கி வருகிறது. பொருளாதார நெருக்கடிகளும் வேலையில்லாத் திண்டாட்டமும் இந்தப் பொருளாதாரத்தைப் பாதிக்கும் சக்தியற்றதாயுள்ளன. இந் நிலைமைகளின் காரணமாய், எல்லோருக்கும் வேலை கிடைப்பதற்கான உத்திரவாதம் ஏற்பட்டு விடுகிறது. தேசப் பொருளாதாரம் இடைவிடாமல் வளர்ந்தோங்கி வருவதின் விளைவாகவும், பொருளாதார நெருக்கடிகள் இல்லாமலிருப்பதின் விளைவாகவும் சோவியத் அரசு எந்த பிரஜைக்கும் அவரது ஆற்றலுக்கேற்ற வேலை கிடைக்கும்படி உத்திரவாதம் செய்து கொடுக்கும் சக்தியுடையதாக விளங்குகிறது, வேலை நாள் 8 மணி நேரத்திற்கு மேல் அதிகரித்துவிடாதபடி கட்டுப்பாடு செய்யப்படுகிறது. குறிப்பிட்ட சில தொழில்களில் வேலை நாள் 7, 6, சில சந்தர்ப்பங்களில் 4 மணி யாகவுங்கூட குறைக்கப்பட்டிருக்கிறது. இம் முறையில் ஓய்வுபெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் கிடைக்கும்படி உத்திரவாதம் செய்யப்படுகிறது. எந்தத் தொழிலில் அல்லது உத்தியோகத்தில் ஈடுபட்டுள்ளவராயினும், உழைப்பாளி மக்கள் யாவருக்கும் வருடாந்திர விடுமுறைகள் கிடைக்கின்றன. அந்தந்த வேலைக்குத் தக்கபடி இரண்டு வாரங்கள் முதல் இரண்டு மாதங்கள் வரை ஆண்டுதோறும் ஒவ்வொருவருக்கும் விடுமுறை கிடைக்கிறது. விடுமுறை நாட்களை ஓய்வு விடுதிகளிலோ அல்லது உடலாரோக்கிய சுகவாச நிலையங்களிலோ கழிப்பதற்கான வாய்ப்புகளையும் பல்வேறு கிளப்புகள், விளையாட்டு மைதானங்கள் முதலிய பல வசதிகளையும் உழைப்பாளி மக்கள் உபயோகித்துப் பயன் பெற்று வருகின்றனர்.

தேசமெங்கும் இலவசமான 7 ஆண்டு காலக் கட்டாயக் கல்வி முறை அமுலில் இருந்து வருகிறது. கல்வி கற்கும் உரிமை சகல பிரஜைகளுக்கும் கிடைப்பதற்கான உத்திரவாதமாகத் திகழ்கிறது இது. உயர்நிலைப் பள்ளிகளையும் விசேஷப் பயிற்சி அளிக்கும் உயர்நிலைப் பள்ளிகளையும் சேர்ந்த மாணவர்கள் அரசாங்கத்தினிடமிருந்து உபகாரச் சம்பளம் பெறுகின்றனர். பள்ளிகளில் பாடங்கள் யாவும் அந்தந்த பகுதியின் சொந்த தாய் மொழியிலே சொல்லிக்கொடுக்கப் படுகின்றன. நகரங்களிலும் கிராமப் பகுதிகளிலும் வாழும் உழைப்பாளி மக்களுக்கு தொழிற் பயிற்சியும் சாகுபடி வேலைப் பயிற்சியும் இலவசமாக அளிக்கப்படுகின்றது. சகல துறைகளிலும் வியாபகமுடனுள்ள அரசாங்க சமூக இன்ஷூரன்ஸ் திட்டத்தினால் முதிய வயதிலும் உழைக்கும் சக்தியை இழக்கும் போதும் பாதுகாப்பு பெறும் சம உரிமை எல்லா பிரஜைகளுக்கும் கிடைப்பதற்கு உத்திரவாதம் செய்து கொடுக்கப்படுகிறது. முதியோர்களும் உழைக்க சக்தியற்றவர்களும் அரசாங்க பென்ஷன்கள் பெற்று வருகிறார்கள். நோய்வாய்ப் படும் சகல தொழிலாளருக்கும், இதர சிப்பந்திகளுக்கும் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுகிறது.

பொருளாதார சமத்துவமும் சோவியத் யூனியனில் நிலவுகிறது. இந்த பொருளாதார சமத்துவம் முதலாவதாக உற்பத்திச் சாதனங்கள் சம்பந்தமாக இங்கு நிலவும் சமத்துவ உறவுகளிலே காணக் கிடைக்கிறது. நிலமும் வனங்களும் தொழிற்சாலைகளும் மில்களும் சுரங்கங்களும் ரயில்வேக்களும் கப்பல், விமான போக்குவரத்துகளும் வர்த்தக நிலையங்களும் சகல விதமான இதர உற்பத்திச் சாதனங்களும் சோவியத் யூனியனில் தனி நபர்களின் உடைமைகளாக இருக்கவில்லை. சோவியத் நாட்டில் விவசாயப் பண்ணைகளுக்கும் தொழிற்சாலைகள், மில்கள், சுரங்கங்களுக்கும் இதர பல தொழில் நிலையங்களுக்கும் உழைப்பாளி மக்கள்தான் எஜமானர்களாக விளங்குகிறார்கள் என்பதும் முதலாளிகளும் நிலச்சுவான்களும் இல்லாமல் அவர்கள் இந் நிலையங்களில் வேலை செய்கின்றனர் என்பதும் புலப்படுகிறது.

இரண்டாவதாக சோவியத் பிரஜைகளின் பொருளாதார சமத்துவம் சகல பிரஜைகளும் சுரண்டலுக்கு உட்படுத்தப் படாதபடி சுதந்திரமாய் வாழுகின்றனரென்னும் உண்மையிலும் காணக் கிடக்கிறது. சோவியத் நாட்டில் எவரும் பிறிதொருவரின் உழைப்பைக் கைப்பற்றி வாழ்க்கை நடத்த முடியாது; அதாவது எவரும் இங்கு மற்றொருவரைச் சுரண்டி அதன் மூலம் லாபம் சம்பாதிக்க முடியாது. ''ஒவ்வொருவரும் அவரவர் திறமைக்கு ஏற்றபடி வேலை செய்யவேண்டும்; ஒவ்வொருவருக்கும் அவரவர் வேலைக்கு ஏற்றபடி ஊதியம் பெற வேண்டும்'' என்ற கோட்பாட்டின்

அடிப்படையில் ஆண்கள், பெண்கள் அனைவருமே சமமான வேலைக்கு சமமான சம்பளம் பெறுகின்றனர். இவ்விதம் அவரவரின் உழைப்பின் தரத்திற்கும் அதன் அளவிற்கும் ஏற்றபடி பிரஜைகள் ஊதியம் பெறுகின்றனர். அதாவது அவர்களது உழைப்பின் முழு பெறுமானத்தையும் அவர்கள் சம்பளமாகப் பெற்று விடுகின்றனர். பிரஜைகளின் வருமானங்களுக்கு எவ்வித எல்லையும் நிர்ணயிக்கப்பட்டுக் கட்டுப்பாடு செய்யப்படவில்லை.

ஆதலால் பொருளாதாரத் துறை உள்பட வாழ்வின் சகல துறைகளிலும் சோவியத் யூனியனில் பிரஜைகளின் சமத்துவம் எதார்த்த ரீதியில் நிலவும் ஓர் உண்மையாகிவிட்டதென்பது நன்கு விளங்குகிறது''

இப்படிப்பட்ட நிலைமை மலர வேண்டும்! இதற்கு ''எல்லோருக்கும் வேலை தரப் போகிறோம்'', என்ற முழக்கமட்டும் போதாது.

வேலை பெற்றோர், வேலை செய்து வயோதிக நிலை அடைந்தோர் ஆகியோரெல்லாம் வாழும்படியான வகையில் சமூக அமைப்பு ஏற்பட வேண்டும். அதைப் பற்றி பெரிய நிதி மந்திரியான தேஷ்முக் எங்கே சிந்திக்கிறார்? பண்டித நேருதான், எங்கே ஆலோசனை வழங்குகிறார்!! புலிகள் போல, முதலாளிகளும் வாழ்வார்களாம்—மான்கள் போல மக்களும் இருப்பார்களாம்!! எப்படி சாத்யமாகும், இது? எல்லோருக்கும் சுகம்!!—ஏற்பட வேண்டுமானால், ''வாழும்நாடு எல்லோருக்கும் சொந்தம்'', என்ற நிலை ஏற்படவேண்டும். அந்த எண்ணமில்லாத கூடாரம், காங்கிரஸ்!எனவே ''எல்லோருக்கும் வேலை இன்னும பத்தாண்டில்!!'' ' எனும் முகக்கம், திருப்திப்பேச்சே தவிர, காரியப் பேச்சல்ல!!

★

# இந்நாளும்—அந்நாளும்

[ஒப்பிலா துரைராசன்]

★

நம் நாடு உரிமை பெற்ற நாடு! இப்போது இங்கு குடி ஆட்சி நிலவுவதாகக் கூறப்படுகின்றது!! ஆயினும், நாட்டில் இல்லையெனச் சொலும் ஏழை இல்லாமலில்லை! கூழுக்கு ஏங்கும் கூட்டம் குறையவில்லை!! பசி, பட்டினி, பஞ்சம் எனப் பாடும் ஏழையர் எண்ணற்றவர். சாலையின்ஓரங்களிலும், சோலையிலும் (பூங்காவிலும்) பசியால் உயிர்விட்டவர்; நாளும்விடுகிறவர்; பல்லாயிரம்!

*

படித்தார், பட்டம் பெற்றார். என்றாலும் பயனில்லை; வேலை கிடைக்கவில்லை. வேதனை வளர்ந்தது. நாட்டு அமைச்சரை நண்ணி வேலை கேட்கலாம்; வழி பிறக்கும் என்று சென்றார். அவரை, அமைச்சரைப் பார்க்க அனுமதிக்கவில்லை! வாயிற் காப்பாளர் குறையா? அல்ல! அல்ல! அல்ல!! வாயிற் காப்பாளர் அனுமதித்திருந்தால் அமைச்சரின் வரவு வாயிற்காப்பாளருக்குக் கிடைக்கும். வேலையை இழக்கவும் நேரிடும்.

குறை கூறி நிறை பெறலாம்' என்று சென்றவர் அமைச்சரைக் காணாததால் ஏமாற்றம் எய்தினார். வீட்டுக்கு வந்தார் நாம் வாழ்ந்து என்ன பயன்? என ஏங்கினார். ஒரு பயனும் இல்லை என எண்ணினார்! தூக்கில் தொங்கினார்.

இப்படி காட்சிகள் இந்நாட்களில் பெருகுகின்றன. நாடு வளமிழந்து வறுமையில் வதைகிறது.

நாட்டை ஆளும் அமைச்சர்களும் நாட்டுக்கு நல்லது செய்தாரில்லை. வறுமையில் வாடும் மக்களுக்கு இன்சொல் சொல்லி; காட்சிக்கு எளியராக விளங்கவில்லை.

எப்படி நம்மை வேற்று நாட்டார், உலகத்தார் மதிப்பர்? ஒருக்காலும் மதியார். எனவேதான் நம் தாயகமாம் தமிழ் கூறு நல்லுலகத்தின் சேய் நாடாம், இலங்கை கூட மதிக்கவில்லை.

*

பண்டை நாட்களில் மன்னர்கள் குடியைத் தழுவிக் கோலோச்சினர் அவர்களுக்கு அறிவுறுத்துவது போல் 'வள்ளுவர்' ''காட்சிக்குஎளியராகவும்; கடுஞ்சொல், சொல்லாதவராகவும்; மன்னர்கள் விளங்கவேண்டும். அப்போதுதான் உலகம் மதிக்கும்'' என்றார்.

''காட்சிக்கு எளியன்:
கடுஞ்சொல்லன் அல்லனேல்;
மீக்கூறும் மன்னன் நிலம்''

*

புலவர் ஆவூர் 'மூலங்கிழார்' ஒரு நாள் 'குளமுற்றத்துஞ்சிய கிள்ளி வளவனை'க் காணச்சென்றார். கண்டாரில்லை. பல நாள் சென்று, சென்று, வந்தார். இன்று, நாளை, என நாட்கள் நகர்ந்தனவேயன்றி, ஒன்றும் பயனில்லை! வருந்தினார்!

மீண்டும் ஒரு நாள் சென்றார்; மன்னனைக் கண்டார்; மனமகிழ்ந்தார். வணங்கினார். பொன்னி பாயும் புகழுடைப் புனல் நாட்டின் சென்னியே பன்னாள் வாழ்க! வாழ்க!! என வாழ்த்தினார்.

அவன் புகழ் பாடுவது போல் அவன் காட்சிக்கு எளிமையில்லாதவனாக, கடுஞ்சொல்லனாக; விளங்குவதைச் செவியறிவுறுத்தினார்.

''நீயே பிறர் ஓம்புறு
மறமன்னெயில்
ஓம்பாது கடந்தட்டவர்
முடிபுனைந்த பசும்பொன்னின்
அடிபொலியக் கழறைஇய
வல்லாளனை வயவேந்தே...
யாமேமின், இகழ்பாடுவோர்
எருத்தடங்கப்
புகழ்பாடுவோர் பொலிவுதோன்ற
இன்று கண்டாங்குக்
காண்குவம் என்றும்
இன்சொல் எண் பதத்தை
யாகுமதி பெரும''

*

இப்படி மன்னர்கள் தவறியபோதெல்லாம், ஒழுக்கமுடைய புலவர்களாம் தமிழ்ச் சான்றோர்கள் மன்னர்களுக்கு இடித்துரைத்து வழுக்கல் நிலத்தில் ஊன்றி நடக்க உதவும் ஊன்றுகோலாக உதவினார்கள்.

மன்னர்களும் உணர்ந்து திருந்தி நடந்தார்கள். இந்நாளோ இவ்விதம் அமைச்சரை அணுகி அறிவுரை பகரும் துணிவுவல்லார் யார்? அப்படி யாரேனும் சொல்லத்தான் இயலுமா? அரசுதான் அனுமதிக்குமா?

நாள், கிழமை, திங்கள் இதழ்களோ கூறப் புகுமானால், அவைகள் நாட்டில் நின்று நிலவமுடியுமா? அரசு தடை செய்யும்.

அந்நாள் அரசு, குடியைத் தழுவிக் கோலோச்சிய நல்லரசு!

இந்நாள் அரசு, குடியைத் தழுவிக் கோலோச்சுவதாகக் கூறி வாழும் வல்லரசு. என் செய்வது? குமுறும் உள்ளங்களை வளரவிடக்கூடாது; அவ்வளவுதான்.

★

திராவிடநாடு

காஞ்சி] 19—12—54 [ஞாயிறு

# ‘இந்தி’ யானை நம்பினல்.........!

★

ஐயா!

நான் ஒரு தெலுங்கன். தி. மு. க. கொள்கைமீது பற்றுக்கொண்டவன். என் அண்ணன் கல்லூர் என்கிற ஊரில் இருக்கிருர். அவருக்குக் கடிதம் எழுதினேன். வேண்டுமென்றே வடவர், ஆட்சிமொழியாக்க இருக்கும் ஹிந்தியில் முகவரி எழுதினேன். அந்தக் கார்டு, என்ன பாடுபட்டிருக்கிறது என்பதை உங்களுக்கு அனுப்பியிருக்கிறேன்.

எர்ரய்யா
சித்தூர்.

*

என்று ஒரு கடிதம் வந்திருக்கிறது, நமக்கு. தோழர் வேண்டுமென்றே செய்தாராம். விளைவு, கடிதம், பல நாட்கள் படாத பாடுபட்டு சென்னையிலுள்ள தலைமை அஞ்சல் நிலையத்துக்குச் சென்று, முகவரி ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, பிறகு சென்றிருக்கிறது! காரணம், அஞ்சல் இலாகாவினருக்கு இந்தியில் அவ்வளவு பரிச்சயம் இல்லாததுதான். இது இன்றுள்ள நிலை. ‘ஆகவேதான் எல்லோரும் இந்தி கற்றுக்கொள்ளவேண்டும்’ என்று, இதனைக் காட்டி வாதாட வரலாம், இந்திப் பிரியர்கள். கற்பதும் வாழ்வதும் பிறகு! இப்போதுள்ள நிலை இது!

*

இந்தியத் துணைக்கண்டத்து முப்பத்தைந்து கோடி மக்களுக்கும் பிரதிநிதியாக விளங்கும் டில்லி பாராளும் சபையிலே, தலைவர் மவ்லங்கரோ, சின்னட்களுக்குமுன்பு, தென்னட்டுப் பிரதிநிதிகள்மீது சீறினராம். அமைச்சர் ஒருவர் ஹிந்தியிலேயே பதில் அளித்தாராம். அது புரியாது விழித்த தென்னட்டு உறுப்பினர் ஒருவர் ‘புரியவில்லையே, தயவுசெய்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்ல முடியுமா?’ என்று கேட்டாராம். அது, மவ்லங்கரை புலியாக்கியிருக்கிறது. கேட்டவர், மக்களின் பிரதிநிதி—இலட்சக்கணக்கான வரி செலுத்தும் மக்களின் வாக்குகளைப் பெற்றுத்தான் சென்றிருக்கிருர். அவர்களை ஆளும் சந்தர்ப்பம் பெற்ற மவ்லங்கர் ‘‘முடியாது; ஹிந்தியில் சொல்லப்படுவதை புரிந்துகொண்டால் புரிந்துகொள்ளுங்கள். இல்லாவிடில், போங்கள். இப்படி, மொழி பெயர்த்துச் சொல்லமுடியாது. இனிமேல், அப்படிச் சொல்வதும் தேவையில்லை’’ என்று ‘‘தீர்ப்பு’’ வழங்கியிருக்கிருர். இனிமேல் முடியாதாம்! இவர்கள் விழிக்கவேண்டியது தானும்!! இவ்வளவு திமிரை, அவர் காண்பித்ததாலோ என்னவோ, பல பாராளுமன்ற உறுப்பினர்கள் மவ்லங்கர்மீது நம்பிக்கையில்லை என்றோர் தீர்மானம் கொண்டுபோயிருக்கின்றனர். தீர்மானம் நிறைவேறுவது சாத்தியமல்ல. எனினும், இப்படியொரு தீர்மானம் வந்ததே, மவ்லங்கரின் இடத்துக்கு இழுக்கு! ஏளனம் செய்யும் உலகு. அது எப்படியோ போகட்டும். பாராளும் சபையை நிர்வகிக்கும் பாக்யம் பெற்றவருக்கு, மொழி விஷயத்திலிருக்கும் திமிரைப் பாருங்கள். மொழி பெயர்த்துச் சொல்லமுடியாதாம். பாராளும் சபைதான் அது.

அங்கே, அப்படி.

இங்கோ, இதோ—கடிதம்.

*

‘‘உத்திரவுகள் பிறப்பித்து ஒரு மொழியை வளப்படுத்தி விடலாமென்று எண்ணுவது அறியாமை’’

அறியாமை! தீட்டுகிறது. ‘மித்திரன்’ இதழ்!! மிகவும் கடுமையான சொல், வருகிறது அந்த வட்டாரத்திலிருந்து. மகிழ்கிறோம்! இந்தியின் நுழைவைப் பற்றி பேசியதால், இவர்களால் ஏளனம் செய்யப்பட்டோர், நாம்! இப்போது, அந்த வட்டாரம் பேசுகிறது!! — பேசுவதைக் கேளுங்கள்.

‘‘ஓடுமுன் நடக்கத் தெரிய வேண்டும். நடையே ஹிந்திக்கு இன்னும் சரியாகப் பழகவில்லையென்பது பிரத்தியட்சம்’’

‘‘உண்மையில் அம்மொழியைப் பலவந்தமாக திணிக்க வேண்டுமென்று அவர்கள் ஆத்திரப் படுகின்றனர்’’

‘‘ஹிந்தி வேகமாகப் பரவவில்லையென்ருல், இன்னும் அம்மொழி போதிய வளம் பெருததின் விளைவு, அது.’’

‘‘நிர்வாகத்திற்கும், சட்ட வாசகத்திற்கும் உயர்தரக் கல்வி போதனைக்கும் ஹிந்தியை உடனே உபயோகிக்க வேண்டுமென்று அம்மொழி வெறியாளர் வலியுறுத்துவது சிறிதும் அர்த்தமற்ற பேச்சு.’’

‘‘அதற்கு வேண்டிய வளமை பெறுவதில் அம்மொழி முதல் கட்டத்தைக் கூடத் தாண்டவில்லை.’’

‘‘ஹிந்தி வளர்ச்சியில் அக்கரை கொண்டவர்கள் ஹிந்தி தெரியாதவர்களை இன்னும் என்னென்ன முறையில் தண்டிக்கலாமென்று யோசித்துக் கொண்டிருப்பது அனர்த்தகரமானது’’

*

நடக்கவே தெரியாது

திணிக்கும் முயற்சி.

ஆத்திரப்படுகின்றனர்.

வளமில்லாதது.

மொழிவெறியாளர்.

அர்த்தமற்ற பேச்சு

தண்டிக்கும் நினைப்பு.

அனர்த்தம்.

இத்தனைச் சொற்களை அள்ளி வீசி அர்ச்சிக்கிறது, 15-ந் தேதிய சுதேசமித்திரன்! இதைவிட நாசூக்கான வகையில், இந்தியின் அருகதையைப் பற்றி எடுத்துச் சொன்னதற்காகத் தான், நமக்குத் தடியடி! கண்ணீர்ப் புகை! குண்டடி! கர்ப்பணிக்குக்கானக வாசம்! எல்லாம் கிடைத்தன. இப்போது, மித்திரனர் சொல்லுகிருர்!!

*

எவ்வளவுதான் இதோபதேசங்களைச் செய்தாலும், வடவர்களுக்கிருக்கும் திமிராதிக்கமட்டும் சிறிதும் குறைந்ததாகத் தெரியவில்லை! இந்திய உபகண்டத்தில் ஏராளமானேர் பேசுகிற மொழி என்கிற ஒரே ஒரு தகுதியைச் சொல்லிக்கொண்டு, பிற மொழியினர் தமக்கு அடிமைகள் என்னும் வெறியுடனேயே நடந்து வருகின்றனர். இதனை, எவரும் மறுக்க முடியாது! தேசியத் தோழர்களே பல முறை, குட்டுப்பட்டிருக்கின்றனர்!!

எனினும் என்ருவது ஒரு நாள்......என்று பெருமூச்சோடு, ‘இந்தியாள்’ கொலுவீற்றிருப்பாள் என்று கனவு காணுவோரும் இல்லாமலில்லை. அவர்கள், நமது முழக்கம் கேட்டால் காதை மூடிக்கொள்பவர்கள்! அந்தரகத்தைச் சேர்ந்ததுதான் மித்திரன் குழாமும்! அவர்கள் எதிர்காலத்தைப் பற்றி, எண்ணிப் பார்க்கவேண்டும். பல கோடி மக்கள் வாழும் இவ்வளவு பெரிய பூபாகத்தில், எப்படி ஒரே மொழி, இயங்க முடியும்? இமய்முதல் குமரிவரை, இந்தி மொழி அரசோச்சுவது, சாத்தியமா? நமது வீட்டுச் சிறு குழந்தை முதல், வடவர் வீட்டுச் சிறுவர் வரை அதே மொழியைப் பேசும் காலம் ஏற்படவா முடியும்? இரு நூறு ஆண்டுகள், வெள்ளையன் இந்த நாட்டை ஆண்டு கூட — அவனது மொழியே சர்க்கார் மொழி என்று விளங்கியும் கூட-ஆங்கிலம் என்ருல் அறியாது விழிக்கும் மக்கள் ஏராளம்! ஏராளம்!! இந்நிலையில், இன்று அல்ல, இன்னும் பதினைந்து ஆண்டு

களுக்குப் பின்னரே இந்தி அரசு மொழியானல் கூட, யாருக்கு லாபம்! இந்தி அறிந்தவன்தான், முன்பு வெள்ளைக்கார கலெக்டர்கள் வந்தது போல, இங்கே நுழைவான்! இப்போது ஏதோ அஞ்சலகத்தில் வேலை செய்து பிழைக்கும் நம்மவருடைய இடத்துக்கும் இந்திக்காரன், வருவான்!! இதைத் தவிர வேறென்ன காணமுடியும்?

இதனை, எல்லோரும் சிந்திக்க வேண்டும்.

இதற்குப் பதில், மாற்று யோசனை உண்டா எனின், அதுவும் கிடையாது.

திராவிடநாடு திராவிடருக்கே— எனும் முழக்கமே, இறுதியில் வெற்றியளிக்கக்கூடியதாகத் தென்படும்.

இப்போது, சொன்னல் சீறலாம் தோழர்கள்! எப்போதும் உண்மைகள் முதலிலேயே இனித்துவிடுவதில்லை. அதுபோலத்தான் நமது இலட்சியமும்.

★

# சட்டமில்லா சட்டம்

[காஞ்சி-கல்யாணசுந்தரம்]

பொதுவாகக் கலைத்துறை அனைத்தும், இதுவரை பக்தி மார்க்கத்தைப் பரப்புவதற்கே பயன் பட்டு வந்தன. குறிப்பாக நாடகக் கலைத் துறைக்கு இதில், முக்கியமாக முதற் பங்கு உண்டு.

பக்திமார்க்கப் போர்வையால், பழமைப் பிடியிலேயே மக்களை அழுத்தி வைத்திருந்த கலைத் துறை, கால மாற்றத்தின் காரணமாக, வேறு திசைக்குத் திரும்பத் தொடங்கியது. வெறும் பொழுது போக்கிற்குத்தான் கலை என்ற சுகவாசிகளின் சொகுசுப் பேச்சுக்கும், பாதை விலகிய கலைத்துறை உள்ளாயிற்று. இன்றும் இந்தப் பேச்சும் எழுந்த வண்ணம்தான் உள்ளது.

காங்கிரஸ் ஆட்சியாளர் பழமைப் பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டு இருப்பவர்கள்தான். எனவே, அறிவுத் துறையில் விரைந்து நடைபோடும் நாடகத் துறைக்குக் கடிவாளமிட முன்வந்திருக்கின்றனர்.

ஆட்சியாளர்கள் உருவாக்கி உள்ள புதிய கடிவாளம், நாடகக் கலையை ஒரு ஒழுங்கான, நேர்மையான, விரும்பத்தகுந்த கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வருவதாக இருந்தால், அதை மக்கள் எதிர் கால வாழ்வில் அக்கரை உள்ள எவரும் எதிர்க்கத் துணியார். ஆனல் புதிய கடிவாளமோ, நாடகக் கலையையே கொன்று, பிறர் கண்களுக்குப் படாமல் சுட்டெரித்துச் சாம்பலாக்கி விடுவதாக அமைந்திருக்கிறது.

ஏற்கனவே இந்த 1876ம் ஆண்டு நாடகச் சட்டம், நாடகத் துறையை, மக்கள் நலத்துக்கேற்ற வகையில் ஒழுங்கு படுத்துவதாக இருந்தது. அச் சட்டத்தில் இருந்த ஒரே ஒரு குறைபாடு, இந்திய அரசியல் சட்டத்திற்கு முரண்பாடு உடையதாக இருக்கிறது என்பதேயாகும், அதாவது, இச் சட்டத்தால் பாதிக்கப் பட்டவர்கள், அதை எதிர்த்து வழக்காடும் உரிமை பெற்றிருக்கவில்லை என்பதே, அம் முரண்பாட்டிற்கான காரணமாகும். அதே சட்டத்தில், இதற்கான ஏற்பாடு ஒன்றைச் சேர்த்து விட்டாலே போதும், என்றும் போல் நாடகத் துறையில், ஆட்சியாளர்கள் விரும்பும் நேர்மையும் ஒழுங்கும் நிலவுவதற்கு.

ஆனல், ஆட்சியாளர்கள், வழக்காடும் உரிமையைப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்போவதாகக் கூறிக்கொண்டே, நாடகக் கலையையே நிர்மூலமாக்குவதற்கு உகந்த சட்டமொன்றைக் கொணர்ந்துள்ளனர். புதிய சட்டம், திருத்தம் எதுவும் செய்யப்படாமல், எழுத்துக்கு எழுத்து அப்படியே சட்ட புத்தகத்தில் இடம்பெற்றுவிடுமானல், அக்கணமே நாடகக் கலையும் செத்து மடியும். அதன் பிறகு உலாவுவது நாடகக் கலை எனச் சொல்லக் கூடியதாக இருக்க முடியாது. நாடக அரங்கு வெறும் பஜனைக் கூடங்களாகக் காட்சி தரும். வாழ்க்கைச் சுமை தாங்க முடியாமல் தூங்காமல் தூங்கி சுகம் பெறும் சுறுசுறுப்பான ரசிகர்கள்தான், அந் நாடக அரங்கைக் காணாது கண்டு பூரிக்காமல் பூரிப்பர்! சில நாட்களுக்கெல்லாம், இதுவும் மெள்ள மெள்ளச் சாகும். நாடகக் கலைக்கு இந்த அவல நிலையைக் கொடுக்கத்தான் புதிய சட்டம் காத்துக்கொண்டு இருக்கிறது.

நிற்க, 'ஆட்சேபகரமான காட்சிகள்' எவை என்பதற்கு மூன்று விரிவான குற்றங்களை, பழைய சட்டம் சுட்டிக் காட்டுகிறது. அதாவது, அரசாங்கத்தினிடத்தில் பகையை மூட்டும் உணர்வைத் தூண்டுவது (இது கி. பி. கோ. 124 (ஏ) விதியின் எதிரொலியாகும்); அவதூறு செய்யக் கூடியது அல்லது மான நஷ்டத்தை உண்டாக்கும் தன்மை உடையது; காட்சியைக் காண்பவர்களிடம் ஒழுக்கக் கேட்டையும், கெடு நினைப்பையும் உருவாக்குவது. நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் விரும்புவது போல், தந்தை இராமமூர்த்தியையும் அன்னை சீதா பிராட்டியாரையும் காப்பாற்றி, மத உணர்வு கொண்டவர்களின் மனதில் முள் தைக்காமல் பாது காப்பதற்கும், மேற் காட்டிய மூன்று குற்ற விதிகளுமே போதுமானது.

அச்சுச் சட்டத்தின் ஆறு துணைப் பிரிவுகளை எழுத்துக்கு எழுத்து விடாமல், புதிய நாடக மசோதாவில், அப்படியே சேர்க்கப் பட்டிருக்கிறது. அத்துடன், 'மதத்தை இழிவு படுத்தியோ, குறிப்பிட்ட பிரிவினரின் மத நம்பிக்கையை இழிவுபடுத்தியோ இந்தியக் குடிமக்களின் ஏதாவது ஒரு பிரிவினரின் மத உணர்வைப் புண் படுத்தினல்' அதுவும் குற்றமாகக் கருதப்படும் என்ற ஒரு புதிய பிரிவும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இக்குற்றப் பிரிவும், நிதி அமைச்சர் மூளையில் புதிதாகப் புலனுகி விட்ட ஒன்ருக ஒருவரும் கொள்ளக்கூடாது. வெள்ளை அதிகார வர்க்கத்தினருக்கும், அந்தக் காலத்திலேயே இதுவும் தெரிந்தே இருக்கிறது. இ. பி. கோ. 295 (எ) பிரிவில், இக்கருத்தைச் சேர்த்தே இருக்கிருர்கள்.

மதத்தையும், மத நம்பிக்கையையும் கேலி செய்வதன்மூலம் ஒரு பிரிவினரின் மத உணர்வைப் புண்படுத்துவதைக் குற்றமெனக்கூறும் புது மசோதாவில் உள்ள விதி, அதற்குரிய பணியினைத் திட்டவட்டமாகச் செய்யக்கூடிய அளவில் உள்ளதா என்பதில், ஆங்கில இதழான 'இந்து'விற்கு ஐயம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு ஏற்பட்,

டிருப்பதுஐயமல்ல; அக்குற்றத்தை வரையறுப்பதற்கு அவ்விதியின் அமைப்பு 'போதியதாக இல்லை—இல்லை இல்லை—ஆற்றல் கொண்டதாக இல்லவே இல்லை' என்ற முடிந்த முடிவிற்கு 'இந்து' வந்துவிட்டிருக்கிறது.

'மதம்' 'மத நம்பிக்கை' என்ற இரு குறிப்புகளும் நிச்சயமற்றத் தன்மையிலிருப்பதால், அவைகள் எதையாவது விளக்குவதாகவோ அல்லது ஒன்றையும் விளக்கவில்லை என்றோ பொருள்கொள்வதற்கு இடமுண்டு, என 'இந்து' கூறிவிட்டு, மத உணர்வை புண்படுத்தும் கொள்கைகள் இவை இவை என அறுதியிட்டுக் காட்டும் முறையால், அப்பிரிவைத் திருத்தம் செய்து விரிவாக்க வேண்டுமென, அவ்வேடு, சட்டசபை உறுப்பினர்களுக்குத் தூபமிடுகிறது—இல்லை—அறிவுரை தருகிறது. புராண இதிகாசங்கள் எவை எவை தெய்வமெனக் கூறப்படுகின்றதோ, அவைகளின் பெயர்கள் அனைத்தையும் குறிப்பிட்டு, அவைகளைக் குறை காணுபவர்கள், மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி ஆகிறார்கள் எனக் கொள்ளும் வகையில், ஐயத்திற்கிடமில்லாத சொற்களால் மேற்படி பிரிவை விரிவுள்ளதாகத் திருத்தி அமைத்தால்தான், 'இந்து' இதழுக்கு மனச்சாந்தி ஏற்படும்போல் தெரிகிறது!

'இந்து' இதழிடம், இதைத்தானே நாம் எதிர்பார்க்கமுடியும்.

புதிய நாடகச் சட்டத்தின்மூலம் ஒரு நடிகத்துறையினர்மீது வழக்குத் தொடரப்பட்ட போதிலும், அதே நபர்மீது, இ. பி. கோ. சட்டத்தின்படியோ, வேறு கிரிமினல் சட்டத்தின்கீழோ வழக்குத் தொடருவதற்கு இச்சட்டம் தடையாக இருக்காது. இப்படி ஒரு விதி, புதிய சட்டத்தில் இருக்கிறது. இதற்கு என்ன பொருள்? இந்தப் போக்கு நாடகக்கலையைக் கொலை செய்ய உதவுமா அல்லது வளரச் செய்ய உதவுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கும்படி, நல்லெண்ணம்கொண்ட காங்கிரஸ் கட்சியினரையே கேட்டுக்கொள்கிறோம்.

இதற்குச் சட்டமென்ற பெயர் துளியும் பொருந்தாது. இதைச் சட்டமில்லா சட்டம் என்று குறிப்பிடுவதுதான் பொருத்தமுடையதாகும்.

காலத்தால் உயிரற்றுப போன ஒரு கருத்துக்கு,- எப்பாடு பட்டாவது நாடகத்துறை மூலம் மீண்டும் உயிர் தர விரும்புவதும், முயற்சிப்பதும், தங்களுக்கே அறிவுண்டு என ஆணவத்தோடு கூறிக்கொள்ளுகிறவர்களிடம் ஏற்பட்டுள்ள தீவிரமான அறிவுக் குழப்பத்தைப் படம் பிடித்துக் காட்டுவதாகவே உள்ளன. சுடுகாடு போன பிணம் திரும்பாது.

★

# கலியாணக் கட்டம்

வைதீகர்கள், சரியான சந்தர்ப்பம் கிடைத்துவிட்டதெனக் குதூகலிக்கின்றனர்.

சனாதன ஓடையைத் தமது வாழ்க்கைக் கழனிகளுக்கு நம்பி வாழும் மனம் படைத்தோர், நல்லதோர் சமயம் இதுவென, கூடிக்கூடிப் பேசுகின்றனர்.

தெருத்திண்ணைகள், அரசமரத்தடிகள், கோயில் பிரகாரங்கள், எங்கும், இன்று அந்தப் பிரச்னை அடிபடுகிறது. அடுப்பங்கரைக்குள் கூட புகுந்து விட்டது.

"ராமாயணத்தை, எப்படியோ நடத்திக் காட்டுகிறார்களாமே."

"ரவிகுலச் சோமனை எப்படி எப்படியோ, சித்தரித்திருக்கிறார்களாமே!!"

பிரச்னை, பெரிதாகி, அகில இந்தியா முழுமையும் அடிபட ஆரம்பித்திருக்கிறது அன்பர் நேருவின் கவனமும், அகில இந்திய இந்து வைதீகர்களின் சிரத்தையும்,ஒன்று திரண்டிருக்கிறது.

ராமாயணம் பற்றிய ஆராய்ச்சி என்கிற அளவில் நில்லாது, ராதாவின் ஒரு நாடகம் என்ற அளவில் போய் விடாது, இந்த விஷயம் அறிவியகத்தை மோதுகிறது.

ஏசுவோர், பலர். பேசுவோர் பலர். இதனை, ஆண்டவனையே வேரறுக்கும் செயல் என்று, ஆர்ப்பரிப்போர், ஏராளம்.

ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியின் அம்புறாத்தூணியிலிருந்து புறப்பட்ட அஸ்திரம், ஏழுகடலுக்குள்ளும் புகுந்து எங்கே அசுரன் இருக்கிறானெனத் தேடி. கடைசியில் அவனைத் துளைத்து, பாபஸ்நானம் செய்து விட்டு பிறகு மீண்டும் அம்புறாத்தூணியை வந்தடைந்தது...என்று பேசுவோரே, அலறுகின்றனர். நாடகத்தால், ராமபிரானுக்கு ஆபத்து வந்துவிட்டதாம்!!

ராமகாதையைப்பற்றிப் பலர், பலவாறாக எழுதிச் சென்றிருக்கிறார்கள்—இந்திய உபகண்டத்திலேயே இடத்துக்கு இடம், இந்தக் காதை பல வேறுமுறைகளில் எழுதப்பட்டிருக்கிறது. எனினும், இந்தச் சந்தர்ப்பம், அறிவியக்கத்தை வேரறுக்கத் தமக்குக் கிடைத்த சரியானதோர் வாய்ப்பு என்று சனாதனிகள் கிளம்புகிறார்கள். அதனால் விசித்திர விசித்திரமான வியாக்யானங்களைச் செய்கிறார்கள்.

இதற்கு சட்டசபையில் விமர்சனம் செய்ய வந்த நிதி அமைச்சர் சுப்ரமணியம், "இராமபிரானைக் காப்பற்றப்போகிறோம் என்று நாங்கள் சொல்லவில்லை. கடவுள் இருக்கிறார் என்று ஒருவர் சொல்வதும், இல்லை என்று இன்னொருவர் சொல்வதைப்பற்றியும் அரசுக்குக் கவலையில்லை. ஆனால் ஒரு சாரார் கொண்டிருக்கிற நம்பிக்கையை இன்னொரு சாரார் புண்படுத்தக் கூடாது," என்று வெளியிட்டிருக்கிறார்.

புண்ணை, அறுத்து சிகிச்சை செய்வதென்கிற முறை ஒன்று. இது கொஞ்சம் எரிச்சலைத் தான் தரும். மருந்து வைத்து கட்டி, உள்ளுக்கும் விஷம் போக்கும் சூரணம் கொடுத்து, குணப்படுத்துதல் இன்னொரு முறை. இது, கொஞ்சம் நாசூக்காக செய்யப்படும் முறை; நல்லது கூட.

இதனால், புண்படுத்துவது என்று பொருள் கூறுகின்றாரே—அதுதான் நமக்குப் புரியவில்லை! ராமபிரானைக் கும்பிடுவோரைக் குத்தி கொண்டா, தாக்குகிறார்கள். இல்லை! அவர்கள் கும்பிடக்கூடாது என்று தடுக்கிறார்கள். அதுவும் இல்லை!! அந்த இராம காதையைப் பற்றி, பலர் வழங்கிய கருத்துக்களை நாடகமாடிக் காட்டுகிறார்கள்.முறையில் காரம் கலந்திருக்கலாம்! காரம் விரும்பாதவர், அந்த இடத்துக்

குப் போகாமலிருப்பதை விட்டு, புரட்சி முழக்கம் ஏன் செய்யவேண்டும்?

சீதா, கற்புக்கரசி!—வைதீகர்கள், வர்ணனைப்படி.

இன்றும் கோயிலில், ராமபிரான் அருகில் சீதாபிராட்டி ஆனந்தத்தோடு காட்சி தருகிறாள். மணமக்களை வாழ்த்தும் பெரியவர்கள் கூட, 'சீதையும் ராமனும் போல வாழ்க!' என்று வாழ்த்துகிறார்கள். ராமன், ஏகபத்தினி விரதன்—மனைவியின்மீது மட்டிலாத ஆசை கொண்ட மணாளன்—புருஷ ரத்னம், என்று போற்றுவோருண்டு.

அந்த ராமன் இராவணனை வென்று, சீதாபிராட்டியைச் சந்திக்கும்போது சொல்லுகிறாராம், "சீதா! உன்னைக் காணும்போது, என் நயனங்கள், சந்தோஷத்தால்கூத்தாடுகின்றன. இத்தனை வருஷங்கள் பிரிந்திருந்த உன்னைச் சந்திக்கின்றேனே என்கிற ஆனந்தம் ஏற்படுகிறது எனக்கு. அதே நேரத்தில் – சீதா! – எனக்கு அவமானமாகவும் இருக்கிறது. உன் மீதுகொண்ட ஆசையின் காரணமாக அல்ல, இராவணனுடன் நான் போர் தொடுத்தது, வெற்றி பெற்றது; என்னுடைய மானத்துக் காகவும், என் குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ளவுமே போர் செய்தேன்; வெற்றியும் பெற்றுவிட்டேன். ஆதலால், உன்னைத் திரும்பவும் என்னுடன் அழைத்துச் செல்லும் உத்தேசமில்லை, எனக்கு. நீ எங்குவேண்டுமானாலும் போ. இலக்ஷ்மணனிடம் வேண்டுமானாலும், பரதனிடமோ அல்லது சுக்ரீவனிடமோ அல்லது விபீஷணனிடமோ யாரிடம் வேண்டுமானாலும் போயிரு!" என்று தெரிவிக்கிறாராம். இப்படிச் சொல்லுகிறார், இந்தியத் துணைக் கண்டத் துணைத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன், 'மதமும் சமூகமும்' எனும் தலைப்பில் செய்த சொற்பொழிவுத் தொகுப்பில்!!

அந்தத் தொகுப்பு மீது, ஆஸ்திக சிரோமணிகளுக்கு ஆத்திரம் வரவில்லை. இதுபோல, எண்ணற்ற நூல்களில் சீதா — ராமனைப்பற்றி வரும் 'விசித்திரமான' இடங்களை நீக்க வேண்டுமென எந்த மைலாப்பூரும் கிளர்ந்தெழவில்லை. ஆனால், இப்போது சல்லடங்கட்டிக் கொண்டு வருகின்றனர்! அறிவியக்கத்தின் மீது, மக்களுக்கோர் ஆத்திரத்தை சிருஷ்டிக்க முனைகின்றனர்!! இந்த விசித்திரத்துக்கு, ஆங்காங்குள்ள காங்கிரஸ் நண்பர்கள் பலரும் துணைபோகின்றனராம் — கட்சிப் பிரதிகட்சி விஷயம் என்ற கருத்தில்—போடு தடையை, விசு உத்திரவை, என்று ஆர்ப்பரிக்கின்றனராம்.

அறிவியகத்துக்கு இராமாயணம் அல்ல, இலட்சியம். அதன் பாதையில், இது ஒரு கட்டம். அதனால் தான், இராமாயணக் கிளர்ச்சியை ஒரு தினுசாக முன்பே முடித்துக் கொண்டு, வேறு பிரச்னைகளில் சிந்தையைச் செலுத்த ஆரம்பித்தது! ஆனால், செக்குமாடு சுபாவம் கொண்டோர், இப்போது நடைபெறும் சுதந்திர ஆட்சியில் தங்கள் கை ஓங்கியிருக்கிறதெனும் கருத்தில் ஓங்காரக் கூச்சலிடுகின்றனர்.

வெள்ளையன் போனபிறகு, வைதீகர்கள் தமக்குச் சரியான சந்தர்ப்பம் கிடைத்து விட்டதாகவே கருதி விட்டனர். எந்த விஷயமானாலும் மத உணர்ச்சியைப் புண்படுத்தினர்—மார்க்கத்தை இகழ்ந்தனர்—சும்மாவிடக் கூடாது — என்று, தோள் தட்டும் சுபாவம் பெற்றனர், இதற்குத் துணைபோகவும் தயாரா யிருக்கிறது, அரசு.

'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆட்சி புரியும் ஆண்டவன்', இது எதைப்பற்றியும் லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை! இதென்ன—ஆலயங்களில் அன்று முதல் இன்று வரை நடைபெற்று வரும் அக்கிரமங்களைக் கண்டுகூட வாயைத் திறக்கவில்லை. அந்த அக்கிரமங்களைச் செய்வோரின் திருக்கூட்டத்தில்தான், சச்சிவோத்தமரும், ஜகத்குருக்களும், இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆண்டவனின் பெருமையைப் பேசுவோரின் மனதைப் புண்படுத்துவதாக அமைச்சர் சுப்ரமணியம் குறிப்பிட்டாரே—அவர் போன்றோரின் சிந்தனைக்கு, இதோர் ஒரு சித்திரம்!!

அலர்மேலுமங்கைத்தாயார் சகிதம் வீற்றிருக்கும் திருப்பதி வெங்கடேஸ்வரருக்கு பக்தர்கள் செலுத்தும் காணிக்கை சம்பந்தமான விஷயம். பொன், வெள்ளி, வைரமுடி, தங்கக்குடை அல்ல, பிரச்னைக்கு வந்திருப்பது! **தலை மயிர்!!** பக்தர்கள் மொட்டை யடிக்கிறார்களல்லவா, அந்தத் தலைமயிர். இரண்டு ஆண்டுகளாக இந்த 'விஷயம்' நீதிமன்றத்துக்குப்போய் கடந்த 8ந்தேதி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. "கலியாணக் கட்ட" வழக்கு என்று பிரசித்திபெற்ற வழக்கு இது. கேசவனுக்குக் கேசத்தைச் செலுத்துவதற்கென திருப்பதியில் உள்ள இடத்துக்கு, கலியாணக் கட்ட சங்கம் என்று பெயர். இங்குதான் உயிரை வழங்கிய உலகநாதருக்கு உத்தமர்கள் மயிரைத் தத்தம் செய்வது. இதற்கென முடிசிட்டை கோயிலார் தருவார்கள் — இலவசமாக அல்ல, காசுக்குத்தான்! அதனை, எடுத்துக் கொண்டு இந்தக் கைங்கரியத்துக்கென 'கோயிலார் அனுமதி' பெற்ற அர்ச்சகர்களிடம் அல்ல — நாவிதர்களிடம் செல்ல வேண்டும், பக்தர்கள். இதற்கு இடையூறாக, சில நாவித நண்பர்கள், கலியாண கட்டத்தில் முளைத்தார்களாம். கோயிலாரின் அனுமதியில்லாமலே, அந்த இடத்தில், 'இந்தக் காரியத்தைச்' செய்தார்களாம். 'போர்டுபோட்டு' பக்தர்களை அழைத்து மொட்டையடித்து அனுப்பினார்களாம். அப்படிச் செய்ததுமட்டுமின்றி, கழிக்கப்பட்ட கேசத்தையும் தரச் சம்மதிக்கவில்லையாம். இதனால், பக்தர்கள் செலுத்தும் 'பக்தி' எங்கோ போய் விடுகிறது எனும் விசாரத்தில் அல்ல — கோயிலின் வருமானம் குறைகிறதெனும் மனக்குறையுடன் வழக்குத் தொடர்ந்தார்கள் — இவர்களை நிரந்தரமாகத் தடை செய்யவேண்டுமெனக் கோரி. விசாரித்த நீதிபதி, கோயிலார் கோரிக்கையை நிராகரித்து, நாவித நண்பர்களுக்குத் தடை விதிக்க முடியாதெனக் கூறி, தீர்ப்பு வழங்கியிருக்கிறார்.

வழக்கும், தீர்ப்பும் அல்ல, முக்கியம். அது; கூறும் பாடம்! அதைக் கவனிக்க வேண்டுகிறோம் — ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் என்று சொல்லுகிறார்கள். ஆனால், காசு விஷயத்தில், கோயில் வேறு, பிறர் வேறு—என்று, சட்டத்தை நாடுகிறார்கள்! இப்படியிருக்கிறது, பக்திப்படும்பாடு!! ஆனால், இந்தப் பக்தர்கள் ஆண்ட

மிகவும் அருமையான நூல்!
# தையற்கலை
ஆசிரியர்: கே. பி. சுந்தரம்
விலை ரூ 2.
பாரி நிலையம், சென்னை.

வனின் திவ்ய நாமப் பெருமைக்கு பங்கம் வருவதாகக் கூறி, முண்டா தட்டிக்கொண்டு, பாயவருகிறார்கள்—சாமி சகஜானந்தம், கொலைசெய்வேன் என்கிற அளவுக்குக் கூத்தாடுகிறார். தலைமயிருக்காக ஒரு வழக்கு! — ஆண்டவனின் சந்நிதியில் அல்ல, நீதி மன்றத்தில். அதை எடுத்து வாதிக்க, அர்ச்சகர்கள் அல்ல; வக்கீல்கள். பணமும், அவர்களுடையதல்ல; பக்தர்கள் செலுத்துவது. இப்படி வாழ்கிறது, வைதீகம்! அதற்குப் பின்பாட்டு பாடும் கூட்டம்!! இவர்கள் பக்தர்களாம்—**ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று நினை; ஆண்டவன் எங்குமிருக்கிறார்; அவர் உன்னிடம் அபிஷேகம், ஆறுகால பூஜையை எதிர்பார்க்கவில்லை—அன்பை எதிர்பார்க்கிறார்; ஈசன், கோயிலிலே இல்லை—எல்லா ஜீவராசிகளின் உயிரிலும் இருக்கிறார்;** என்று சொல்வோர்; நாஸ்திகர்களாம்! நடுத்தெரு ஜாலராக்கள், ஆத்திகர்களாம்!! இவ்விதம் கூறிக்கொண்டு, அறிவியக்கத்தாராகிய நம்மீது பாய்கின்றனர்—சமூக மாறுதலை எதிர்க்க சல்லடம் கட்டிக்கொண்டு புறப்படுகின்றனர். இந்த சமயவாதிகளுக்கு, காங்கிரஸ்காரர்களும், ஒத்து ஊதுகின்றனர்!!

ராமாயணமும் இதுபோன்ற விளக்கங்களும், மக்களின் மனதைப் புண்படுத்துவதாக அமைச்சர் அறிவித்தாரே — திருமலை தேவனுக்கு, வாயிருந்து, "என்னப்பா! சாத்திரண தலைமயிர்— இதற்காகவா, என் பெயரைச் சந்திக்கு இழுக்கிறீர்கள்?" என்று கேட்டிருந்தால், என்ன பதில் சொல்வார், அவர். மனம் என்ன பாடுபட்டிருக்கும்! ஆண்டவன் வாய்மூடி மௌனியாகிவிட்டார் என்பதால், ஆத்திகப் போர்வையில், நரித்தனம் செய்ய நினைக்கிறார்கள்! அதற்கு அரசும் ஒத்து ஊதுகிறது!

இந்தியா சுதந்திரம் அடைகிறது என்றபோது, இதனால்தான், வைதீகர்கள் பூரித்தனர். அந்தப் பூரிப்பு, இப்போது பொங்கி வழிகிறது! அந்தத் துணிச்சலில், அறிவியக்கத்தின்மீது பாய்கிறார்கள்.

வைதீகர்கள், எல்லாநாடுகளிலும் இப்படித்தான் செய்திருக்கிறார்கள்; ஆனால், அந்த வைதீகர்கள் வீசும் வெண்சாமரத்தைப் பெரிதென எண்ணி ஒரு அரசு துணைபோவதென்பதுதான், ஆபத்து. அதனால், நாட்டுக்கு ஏற்படும் தீங்கு பெரிது! வளரும் மறுமலர்ச்சியைத் தடுக்க இவர்களும், ஒத்துழைக்கிறார்கள் என்பது பொருள்—இந்த வேதனைக்கு காங்கிரஸ் தோழர்கள், ஆதரவளித்தல் கூடாது! கள்ளியும்முள்ளும், அடர்ந்த காடாகயிருக்கிறது நம்நாடு என்பதில் எந்தக் கட்சியினருக்கும் அபிப்பிராய பேதம் இல்லை. அந்தக்காடு, வைதீகருக்கு வாழ்வளித்தால் வளருமே ஒழிய, அழியாது! இன்று வைதீகர்களுக்கு எப்போதும் இல்லாத ஒரு துணிவு பிறந்திருக்கிறது—அதற்கு ஆளும் அரசே காரணம் எனின்—ரஸ்புடீனை நம்பிய ஜாரின் சரிதமே கவனத்துக்கு வருகிறது! இவனால், அவன் அழிந்தான் — அவனால், இவனும் அழிந்தான்!! ஆதலால், வளரும் புதுமையைக் கிள்ளி எறிய முயல்வோருக்கு, அரசு ஆதரவளித்தல்கூடாது. அதிலும், இங்கேவைதீகம் வறண்ட வயலல்ல! குலுங்கிடும் சோலை! அதனால்தான், தலைமயிருக்குக் கூட, சண்டை தொடுக்கிறது. "கலியாண கட்டங்கள்", ஒன்றல்ல; எங்கும், உண்டு — அன்று முதல் இன்று வரை, ஆங்காங்கும் பல ரூபங்களில் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. இந்நிலை மாற, **எல்லா உயிரும் ஈசன் கோயில்!** — எனும் மனோபாவம், மலரவேண்டும். இதற்காகப் பாடுபட்ட புத்தரையும், ராமலிங்கத்தையும், போன இடம் தெரியாமல் ஆக்கியது, நமது வைதீகம்! அது, இப்போது புலியாக நினைக்கிறது!! அதற்கு, எந்தப் போர்வை கிடைக்கும் என எதிர்பார்க்கிறது. அதனால்தான் இப்போது ராமாயணப் போர்வையை எடுத்துக்கொண்டு, பாய்கிறது! எச்சரிக்கையாகயிருக்க வேண்டும், வைதீகத்தின் ஆபத்தை உணர்ந்த எல்லோரும்!

★

## வாழப்போவது அவர்கள்!

ஆண்டு ஒன்றுக்கு 3000 லாரிகள், டாடா நகரிலிருந்து உற்பத்தியாகும். ஜெர்மனியின் டைம்லெர் பென்ஜ் என்ற கம்பெனியுடன் இதற்கான ஒப்பந்தத்தை டாடா கம்பெனியார் சமீபத்தில் செய்து கொண்டிருக்கிறார்கள். இரு கம்பெனியின் ஒத்துழைப்பிலும் லாரிகள் தயாராகுமாம்!!

*

பத்திரிகைக் காகிதம் தாரிப்பதற்கு மத்திய பாரதத்தில் அமைக்கப்பட்டுள்ள 'நேபாமில்ஸ்' நியுயார்க் 'எபாஸ்கோ சர்வீஸ்', கம்பெனியால் கட்டப்பட்டதாகும் இத்தகைய உற்பத்திசாலை, இந்தியாவிலேயே, இதுதான் முதலாவதாகும். இந்தக் கம்பெனியைப் பராமரித்து உதவ, அமெரிக்காவிலிருந்து ஐந்து நிபுணர்கள் வரப்போகிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு, இந்தியாவுக்குத் தேவையான பத்திரிகைக் காகிதத்தில், மூன்றிலொரு பகுதியை அதாவது 30000 டன் காகிதம் இங்கிருந்து உற்பத்தியாகும்.

## மதுரை மாநாடு - அறிக்கை

### வரவேற்புக் குழு உறுப்பினர்களுக்கு

1955 ஜனவரி 8, 9 தேதிகளில் நடைபெறும் மதுரை மாவட்ட தி. மு. கழக மாநாட்டுக்கு மாவட்டக் கழக உறுப்பினர்கள், வரவேற்புக் குழு உறுப்பினர் கட்டணம் ரூ. 5-ம் உடனடியாக கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி, தங்களை வரவேற்புக் குழு உறுப்பினராக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுகிறோம்.

**எஸ். முத்து.**
மாநாட்டுச் செயலாளர்,
4, கட்ராம்பாளையம், மதுரை.

குறிப்பு;—தங்களூர் கிளைக் கழகத்தின் பெயர் பொறித்த கொடியை விரைவில் அனுப்பிவைக்கவும்.

புதுமைக் குரல்!

**கலா நிதி**
[திரை-வார இதழ்]
விலை 2 அணா
கலாநிதி, சென்னை-2

தொடர் சித்திரம்

# கடிகாரம்

6

அண்ணல்

என் கோபத்தைக் குறைத்து விட்டாள், அந்தக் கோமள வல்லி! கதவைப் பூட்டிக் கொண்டு புறப்பட்டபோது, கலகலவென்ற சிரிப்பொலி கேட்டது. எதிரே, நின்றாள், நாச்சி! புன் சிரிப்பை வீசினாள். போதுமே! புகையும் எரிமலையைக் கூட அடக்கி விடுமே, மையலாரின் புன் முறுவல். அருகே வந்தாள்! என்னைத் தொட்டாள்!! என்னுடைய கோபம் எல்லாம், எங்கோ போயிற்று. "அப்படியே அவளைத் தூக்கி.......!"—நாச்சியின் முகத்தைக் கண்டபோது, அவ்வளவு பசி ஏற்பட்டது எனக்கு. இருந்தாலும், 'பிகு'வை விடலாமா? கதவைத் திறந்து கொண்டு உள்ளே போய் உட்கார்ந்தேன்! சந்தையில் வாங்கிவந்த சாமான்களுடன் அவளும் வந்தாள்!! அருகே, அமர்ந்தாள். ரயிலில் வந்துவிடலாம் என்று நினைத்தாளாம் — வீணாக இரண்டணாவை ஏன் செலவழிக்க வேண்டும், நடந்தே போய் விடலாம் என்று வந்தாளாம்—வழியில் சிங்கார மடத்து விழாவின் காரணமாக ஏராளமான கூட்டமாம்—அதைத் தாண்டி வருவதற்குள் இவ்வளவு நேரமாகி விட்டதாம். பேச்சுடன் பித்தம் தரும் போதையையும் ஊட்டிக் கொண்டிருந்தாள்! பிரியவல்லிகளுக்கு அருகே அமர்ந்து பேசிய பழக்கம், உங்களுக்கும் இல்லாமலா இருக்கும்? அருகிருப்பதே தேன் குடிப்பது போன்றது! தேனே, வலிய வலிய நாவில் வந்து விழுந்தால், மனக்கிறுக்கம் ஏற்படுகிறதல்லவா? அந்த நிலை எனக்கு! ஏனெனில், பேசிக் கொண்டிருந்த நாச்சி, சும்மாயில்லை!! என்ன செய்தாள்?—என்று கேட்கிறீர்களா — உங்கள் வீட்டுக் கட்டிலில் நீங்களும் உங்கள் மனைவியும் இருக்கும் போது, உங்களது கையும் காலும் என்னென்ன செய்கின்றன! அதே சேட்டைகள்—செய்தது, நானல்ல, வள்ளி!! அவ்வளவுதான், போங்களேன். பொங்கி எழுந்த என் ஆத்திரம் எல்லாம் போயிற்று. "நாச்சி! வந்ததுதான், வந்தாய். வழியிலிருக்கும் சிங்கார மடத்துக்குப் போய், விபூதி வாங்கிக் கொண்டு வந்திருக்கக்கூடாதா?", என்று கேட்டேன்!

சிங்காரமடம், எங்கள் வட்டாரத்தில், பிரசித்திபெற்றது. ஒவ்வொரு வியாழக்கிழமையும், குருநாதர் காட்சி தருவார்! அதுவும், சாதாரணமான குரு அல்ல அவர்! ஜகத் குரு!—எந்த 'ஜகத்'துக்கோ நானறியேன் – ஆனால், எல்லோரும் அப்படித்தான் சொல்லுவார்கள். அவரை நாடிச்சென்று, பலன்பெற்றோர் பலருண்டாம்; அவரைப் பார்த்துவிட்டுவந்தால்...நாச்சியின் வயிற்றில் ஒரு புழு பூச்சி....! அந்த ஆசை தான் எனக்கு. கேட்டேன்; நாச்சியின் முகமே மாறிற்று. இப்படித்தான், ஏதாவது கோயிலுக்குப் போகலாம், சாமியைத் தெரிசித்து விட்டு வரலாம், குருபூஜையைப் பார்க்கலாம் என்று நான் அவளை அழைத்தால் அவள் முகம் மாறுவதுண்டு. அப்போது, சில வேளைகளில், என்னைக் கிண்டல் செய்வது போல ஒரு பாடலைப் பாடுவாள்—உங்கள் கடைக்கு வந்தபோது பாடிக்கொண்டு வந்தேனே, **"உண்மையில் கடவுள் உண்டோ! இல்லையோ!"**, அந்தப் பாட்டுத்தான் அது. அதைப் பாடிக் காட்டுவாள். சில வேளைகளில், வேறு திசையில் என் கவனத்தைத் திருப்பி விடுவாள்!! புன் சிரிப்பும், கேலியும் அவள் முகத்தில் தாண்டவமாடினாலும், அகத்தில் ஏதோ ஒரு இரகசியம் புதைந்து கிடப்பதாக எனக்கு ஒரு சந்தேகம். இந்தச் சந்தேகம் இருக்கிறதே, இது ஒரு தீராத வியாதி! ரோஜாவின் மணத்தைக் கூடப் பிரித்து விடும் — வாழ்க்கை ஜோடிகளின் இன்பத்தையே துண்டித்து விடும். ஒரு குளம் பாலைக் கூட ஒரு துளி விழுந்தால் நஞ்சாக்கிவிடும்! அது, ஏற்பட்டு விட்டால், தென்றலும் புயலாகும்—தேனும், தீயாகும். அந்தச் சந்தேகத்துக்கு ஆளானேன்! ஆனால், அதைவிட, நாச்சி மீது நான் கொண்டிருந்த காதல் 'சக்தி' வாய்ந்ததாக இருந்ததால், அந்த சந்தேகம் மனதின் ஒரு மூலையிலே அமுங்கிக்கிடந்தது. தீ, எங்கேயிருந்தால் என்ன! சிறிது காற்று அடித்தாலும், உலர்ந்த சருகு கிடைத்தாலும், கோர உரு எடுப்பதுண்டல்லவா? என் சந்தேகமும், இன்று, விசுவரூபம் எடுத்துக் கொண்டது! "ஏன், நாச்சி, அப்படியே மடத்துக்குப்போய், தெரிசித்துவிட்டு, விபூதி வாங்கிக் கொண்டு வந்திருக்கக் கூடாதா?"

பேசாதிருந்தாள் நாச்சி! சிறிது நேரத்துக்கெல்லாம், "ஆமாம்! அதற்கென்ன? உங்களுக்கு அவ்வளவு ஆசையாயிருந்தால், ஒரு தடவை போய் வந்தால் போகிறது. வாருங்கள், சாப்பிடலாம்."

"ஏன் இப்படி தெய்வ காரியங்கள் என்றால், சலிப்போடு பேசுகிறாய்?"

"சலிப்பொன்றுமில்லை! எனக்கு எதிரேதான், கடவுள்போல நீங்கள் இருக்கிறீர்களே! இன்னொரு கடவுளை நான் ஏன் தேடிக்கொண்டு போகவேண்டும்......"

"இப்படிச் சொல்லுகிற பெண்கள்தானே கூட்டங் கூட்டமாகக் கோயிலுக்குச் செல்கிறார்கள்..."

"அவர்களல்ல, நான்"

**அவர்களல்ல நான்**—என்று கூறிய போது, நாச்சியின் குரலில் வேகமும் கோபமும் தென்பட்டது. சாப்பிடக் கிளம்பினோம். திடீரென ஞாபகம் வந்தவள்போல, நாச்சி சந்தையிலிருந்து வாங்கிவந்த சாமான் மூட்டையிலிருந்து ஏதோ ஒன்றை எடுத்துக் கையில் மறைத்துக் கொண்டு, "இது என்ன சொல்லுங்கள் பார்க்கலாம்" என்றாள்.

"என்ன?"

"உங்களுக்காக வாங்கி வந்திருக்கிறேன்......"

"கொடு பார்க்கலாம்"

"சொன்னால்தான் கொடுப்பேன்"

"கொடுத்தால்தானே சொல்லலாம்"

அவள் கொடுக்கவில்லை; தாவிப் பிடுங்கினேன். **சிறு பேனாக் கத்தி.** பல்

## பொங்கல் மலர்

### சந்தாதாரர்கள் கவனத்துக்கு

இவ்வாண்டுப் பொங்கல் மலரின் விலை ரூபா. **1—8—0** ஆகும். முன்பணமாக ரூபா. 1—8—0 அனுப்புகின்ற சந்தாதாரர்களுக்கு மட்டும்தான் மலர் அனுப்பப்படும். ரூபா. 1—15—0 அனுப்புகிறவர்களுக்கு மலர் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படும். 25-12-54-க்குள் சந்தாதாரர்கள் மலருக்குரிய தொகையை அனுப்பிவிட வேண்டும்.

பொறுப்பாளர்.

குச்சி ஒடிப்பதற்கும், இலை தைப்பதற்கும் என்று நான் வைத்திருந்த பேனாக்கத்தி போனவாரம் ஸ்டேஷனில் தொலைந்துவிட்டது. அந்தக் கத்தியைப்பற்றி ஒருநாள் முழுவதும் வருத்தப்பட்டேன். அதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு சந்தையிலிருந்து புதுக் கத்தி வாங்கிவந்திருக்கிறாள், என் நாச்சி. எப்படிப்பட்ட மனைவி? யாருக்குக் கிடைக்கும் இப்பேற்பட்ட மனைவி!

இருவரும் சாப்பிட்டோம்—வழக்கமான சேட்டைகளுடன் தான். படுக்கையும் விரிக்கப்பட்டது. வெளியில் உட்கார்ந்து ஒரு 'பீடி'யை ஊதிவிட்டு வந்து படுத்தேன், நான். நாச்சி, பானைகளைக் கழுவி வைத்துக்கொண்டிருந்தாள். வருவாள் வருவாள் என்று காத்திருந்தேன். வரவில்லை; மனமோ ஒரு நிலையில் இல்லை. எழுந்திருந்து அடுப்பங்கரைப் பக்கம் சென்றேன். என் காலடி சப்தம் கேட்டதும், நாச்சி அவசர அவசரமாக எழுந்து சென்று, பானைகளுக்குள் எதையோ மறைப்பது கேட்டது. என்னவாக யிருக்கும்! ஏன், அவசரமாக மறைக்க வேண்டும்!! சந்தேகப் புயல். தாவினேன். பார்த்தேன். இப்போது, வழக்கில் மாட்டிக் கொண்டு அவதிப்படுகிறதே, அதே கடிகாரத்தை எடுத்து ஒளித்து வைத்துக்கொண்டிருந்தாள்!! நான் பார்த்து விட்டதைக் கண்டதும், அவள் கண்ணிலே தென்பட்ட மிரட்சி இன்றும் எனக்கு ஞாபகமிருக்கிறது. பதுக்கியது என்னவென்பதைக் காணப் பாய்ந்தேன்! நாச்சியின் மிரட்சி, என் மனதில், எழுந்த சந்தேகத்தைப் புயலாக்கிற்று. நான் எதிர்பார்த்தது, வீணாகவில்லை! கடிகாரத்தைக் கண்டேன். கடிகாரம் எப்படிக் கிடைத்தது நாச்சிக்கு? ஏன், என்னைக் கண்டதும், அவசரத்துடன் எடுத்துப் பதுக்க முயலவேண்டும்? என்ன, காரணம்! — கேட்டேன், நாச்சியை. பதில் வரவில்லை! பயந்தபடியே நின்றாள்!! என் மனதிலோ ஓராயிரம் எண்ணங்கள் கூத்தாடலாயின........நாச்சியைப் பார்த்தாலோ, எதோ பெரிய ஆபத்தில் சிக்கிக் கொண்டவளைப்போலவிழிக்கிறாள். ஏது, அவளுக்கு இந்தக் கடிகாரம்? ஒரு வேளை........நாச்சி போய்க் கொண்டிருக்கிறாள். ஒரு பணக்காரன் கூப்பிடுகிறான். போகிறாள். கட்டில் அசைகிறது! கனவான், என்ன வேண்டும் என்று கேட்கிறார். நாச்சிக்கு அவன் கட்டியிருக்கும் கடிகாரத்தின் மீது கண் விழுகிறது. அதைக் கண்ட கனவான், கடிகாரத்தையும் அவள் கையிலே கட்டி, அதன் அடையாளமாக முத்த முத்திரை யொன்றும் தந்து அனுப்புகிறான்!......இப்படி நினைக்கவே தாங்க முடியவில்லை, என்னால். அறையே சுற்றுவது போலிருந்தது, எனக்கு. அவளது கரங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, உண்மையைச் சொல்! ஏது உனக்கு இந்தக் கடிகாரம்!! என்று அலறினேன். அவள், விழித்தாள்; விபரம் கூறவில்லை. அழுதாள்; பதில் தரவில்லை. மண்டியிட்டாள்; விளக்கவில்லை, சந்தேகத்தை. நான், எரிமலையானேன்! இன்னொரு சிந்தனைச்சுருள்.....அழகான கடிகாரம் ஒன்றைப் பார்க்கிறாள் நாச்சி. அதன் மீது ஆசை வருகிறது, அவளுக்கு. கடைக்காரன் ஏதோ வியாபாரச் சந்தடியிலிருக்கும் போது, தெரியாமல் திருடிக் கொண்டு வந்து விடுகிறாள்......

"நாச்சி! எங்கேயாவது திருடினாயா?"

"இல்லை!"

"பிறகேது, இந்தக் கடிகாரம்?"

குற்றமில்லாத நெஞ்சென்றால் கூற வேண்டியதுதானே, பதிலை! அப்படியில்லாமல்நடுங்குவானேன்? என்னை இப்படிப் பார்ப்பானேன்!! மாலை முதல் அவள் மீது ஏற்பட்ட சந்தேகங்கள், பேருருவெடுத்தன. நான் நினைப்பது சரி! அவள், மணமாறு மல்லியல்ல — குணக்கேடி; காமப்பசிதீர்க்கும் கள்ளி......இப்படி நினைத்ததுதான் தாமதம்! நான், மிருகமானேன்!! இந்த நாச்சியை எவ்வளவு நம்பினேன்? அவள் மீது எவ்வளவு நம்பிக்கை வைத்தேன்! சண்டாளி, என்னைச் சாகசத்தால் மயக்கியிருக்கிறாளே! இவள் என் மனைவியா? எனக்கு இவள் காட்டும் நன்றியா, இது? அவளைப்பிடித்துக் குலுக்கினேன், "சொல்லடி நீலி! சொல்! எவன் கொடுத்தான், இந்தக் கடிகாரத்தை?"

"வீணாகச் சந்தேகப்படாதீர்கள்! நான் மாசற்றவள்..."

"சொல், விபரத்தை. ஏது உனக்கு இந்தக் கடிகாரம்?"

விழிக்கிறாளே யொழிய, பதிலில்லை! நான் சூறாவளியானேன்!! அன்பும், காதலும், சிறிது நேரத்துக்கு முன்பு பூத்துக் குலுங்கிய என் குடிசை போர்க்களமாயிற்று. எவளை மயில் என்று நம்பினேனோ அவள் மந்தியாகி நிற்கிறாள் என் எதிரே! பூவென நம்பி, நான் போற்றிக் கிடந்தது, பூ நாகமாகி எதிரே நிற்கிறது. நான் உண்ணும் பாண்டம், நாலுபேரின் எச்சில் பட்டது... நாச்சி, என்னுடையவள் மட்டுமல்ல —அவளுடைய இருதயத்தில் எனக்கு மட்டுமல்ல, இன்னும் யாராருக்கோ இடம் இருக்கிறது. அவள், தேனல்ல! சாக்கடைநீர்!! நிலவல்ல! மேகம்!—எப்படிச் சகிக்க முடியும்? சந்தையிலிருந்து எனக்காக வாங்கி வந்து தந்தாளே—அந்தப் பேனாகத்தி — தென்பட்டது. அதை எடுத்துப் பிரித்தேன்! "பேசடி, பேயே! நம்பிய என்னை மோசம் செய்த உன்னை ஒரு நிமிஷத்தில், எமனுலகுக்கு அனுப்பிவிட்டு நானும் சாகிறேன்", என்று அலறிக் கொண்டே, பாய்ந்தேன். என் பிடியிலிருந்து தப்ப, அவள் கதவை நோக்கி ஓடினாள். கதவைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு, வெறி கொண்ட புலியானேன். பானைகள் உருண்டன — என் பிடியிலிருந்து நழுவ, அங்கும் இங்கும் ஓடினாள், நாச்சி. விடுவேனா! பிடித்துக் கொண்டேன்! கத்தியை ஓங்கினேன்!!

(வளரும்)

# விளம்பரம் சொல்லும் விளக்கம்

[சிவம்]

டென்மார்க்கில் தயார் செய்யப்பட்ட பால்பவுடர். பக்குவமானது—நல்ல பலன் அளிக்கக்கூடியது!

வர்ஜீனியாப் புகையிலை காரம் மட்டுமல்ல, குணமும் கொடுக்கவல்லது!

லங்காஷயர் மில்லின் தயாரிப்பு—துல்லியமானவை—நீடித்து உழைக்கும் ஆடைகள்.

நாள்தோறும் இப்படிப்பட்ட விளம்பரங்கள் வெளியாவதைக் கண்டிருக்கிறோம். வர்த்தக நிலையங்கள், தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களைப்பற்றிப் பத்திரிகைகள் மூலமும், சுவரொட்டிகள் மூலமும், வானொலிமூலமும், டெலிவிஷன்கள் மூலமும் விளம்பரம் செய்கின்றன.

குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்கிறோம்—பாங்கிகள் இப்படி விளம்பரம் செய்கின்றன.

அடமானம் ஏதும் தேவையில்லை. நம்பிக்கையின் பேரில் கடன் தருகிறோம்—இப்படியும் பலர் விளம்பரம் செய்கிறார்கள்.

பயன்தராத பொருளையும் பாரில் பலரால் புகழப்பட்டது என்று விளம்பரம் செய்வோரும், உண்மையிலேயே தர உயர்வு கொண்டதாக இருந்தாலும்—திறமையல்லாதகாரணத்தால் நல்ல முறையில் விளம்பரம் செய்யாதோரும் நாட்டிலே பலர் இருக்கிறார்கள்.

நாம் இங்கே பொது மக்களின் கவனத்திற்கென்று செய்யப்படும் விளம்பரம் ஒன்றைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறோம். 'வடக்கே இருந்துவரும் பொருள்—ஆகவே உயர்தரமானது என்று இப்போது தமிழ் நாட்டிலே விளம்பரம் செய்கிறார்கள்.

வடநாட்டிலே தயாரிக்கப்படுவது அதன் காரணமாக உயர்ந்தது என்று விளம்பரம் ஒன்று தருகிறது என்றால் அந்த விளம்பரம் தரும் விளக்கத்தை தெற்கே வாழும் மக்கள் கவனிக்கவேண்டியது அவசியமானதாகும்.

எதற்கெடுத்தாலும் வடநாடு—தென்னாடு என்ற பேதமா — இது கூடாது — இவ்வளவு குறுகிய நோக்கம் கூடாது என்பவர்கள் வேண்டுமென்றால் வாளா இருக்கலாம்—வடநாடு வாழ்கிறது, தென்னாடு தேய்கிறது என்றால் நம்மைப் பார்த்து துவேஷிகள் என்போர் இன்னமும் இருக்கத்தான் செய்கிறார்கள். வடநாடு அமெரிக்கா போன்று செல்வத்திலே கொழிக்கிறது.

நாட்டையாளும் சர்க்கார் தனது அன்புப்பார்வையை வடநாட்டு முதலாளிகள்மீதே செலுத்துகிறார்கள். தங்களின் ஆதரவுத் திட்டங்களை வடநாட்டிலேயே நிறைவேற்றுகிறார்கள். வடநாட்டு விவசாயி அமெரிக்க முறையில் விவசாயம் செய்கிறான்—விளைவைப் பெருக்குகிறான். அதற்கு ஆவன அனைத்தையும் டில்லி சர்க்கார் செய்து தருகிறது. தென்னாட்டு உழவனோ—கடன் சுமை தாங்காது — கடன் நிவாரணச் சட்டத்தை இன்னும் இரண்டாண்டு காலம் நீடிக்கமாட்டார்களா என்று ஏங்குகிறான்.

தொழிலாளர் இன்சூரன்ஸ் திட்டங்கள் பல அங்கே நிறைவேற்றப்படுகின்றன. வடநாட்டு மில்களில் உற்பத்தி அளவுக்கு மீறிவிட்டதாம். லங்காஷயர் மில் அதிபர்கள் இந்தியத் துணிகளின் போட்டியைச் சமாளிக்க இயலாது லண்டன் சர்க்காரின் தலையீட்டைக் கோருகிறார்கள். உழைப்பு அங்கே பெருகிவிட்டது. உல்லாச வாழ்வுக்கு சர்க்கார்புதிய திட்டங்களைத் தீட்டியவண்ணம் இருக்கிறது. வடநாட்டு முதலாளிகள்வாரம் தோறும் அமெரிக்கா சென்று புதியஉறவுடன் திரும்பி பெரும் திட்டங்களைத் தீட்டி நேரு சர்க்காரிடம் தருகிறார்கள்.

தெற்கேஆட்சிபுரியும்சர்க்கார்கள் எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதற்கும் தங்கள் ஆட்சி நீடிப்பதற்கும் திட்டங்கள் பல தீட்டுகிறார்களேயன்றி மக்களின் நலன் கருதி ஆட்சி செலுத்துவதாகக் காணோம். வடநாடு தென்னாடு என்று பேசுவது குறுகிய மனப்பான்மை என்பவர்கள் நமது கருத்தைமறுத்துப் பேச இயலாது ஏதேதோபோலிக் காரணம் காட்டுகிறார்கள்.

தென்னாடு என்றால் இகழ்வாகப் பேசுகிறார்கள்—வடநாட்டிலே பாராளு மன்றத்திலே உள்ள தென்னாட்டு உறுப்பினர்கள் தென்னாடு அலட்சியப்படுத்தப்படுவதை உணர்ந்து வருகிறார்கள்.

வடநாட்டு வியாபாரிகள் தென்னாட்டு மார்க்கெட்டை கொஞ்சம் கொஞ்சமாகத் தம் வசப்படுத்த முனைந்துள்ளனர். அதே நேரத்தில் தென்னாட்டுத் தொழில்களை எவ்வளவுதூரம் நசுக்கமுடியுமோ அவ்வளவையும் செய்கிறார்கள். அந்த முறைகளில்ஒன்றுதான்நாம் மேலே குறிப்பிட்டுள்ள விளம்பர முறை. வடநாட்டில் தயார் செய்யப்படும் பிஸ்கோத்து ஒன்றின் விளம்பரத்தை கீழே பாருங்கள்.

Healthfull Biscuits
from the
Healthy North

"வளமையுள்ள ஆண்களும், திடகாத்திரமான பெண்களும், மற்றும் உயர்ந்த கோதுமை விளைநிலங்கள் உடைய ஆரோக்கியமான வடக்கிலிருந்து, ஆரோக்கியமளிக்கும் சுவை மிகுந்த சுறுசுறுப்பு அளிக்கக் கூடிய........பிஸ்கோத்துக்கள் இப்போதுதான் தயாரிக்கப்பட்ட நறுமணத்துடன் உங்களுக்குக் கிடைக்கும். என்றென்றும் தினமும் வடக்கிலிருந்து வரும் ஆரோக்கியத்தையளிக்கக்கூடிய பிஸ்கோத்துக்களை உங்கள் குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் கொடுங்கள்"

இங்கு, ஏழையின் வாழ்வு உயரும் என்ற நம்பிக்கை காணோம். ஆனால், வடக்கே வளமையுள்ள ஆண்களும், திடகாத்திரமான பெண்களும் வாழ்கிறார்களாம். ஆரோக்கியமான வடக்கு என்று விளம்பரம் போடுகிறார்கள். வடக்கையும் தெற்கையும் டில்லியில் இருக்கிற நேரு சர்க்கார்தான் கடந்த பத்தாண்டுக் காலமாக ஆண்டுகொண்டிருக்கிறது. ஏன் இந்த வேறுபாடு என்று கேட்டாலோ நம்மைக் கோபிப்போர் ஏராளம் இருக்கிறார்கள்.

ஆரோக்கியமான வடக்கிலிருந்து வருகிறதாம் – காங்கிரசார் ஆட்சியில் அபலைகளாக மாறிவிட்டு, அனாதைகளாக நிற்கும் தென்னாட்டு மக்கள் அதை வாங்க வேண்டுமாம். தென்னாட்டு மக்களை இழிவுபடுத்தும் விளம்பரமா அல்லது தெற்கே உற்பத்தியாகும் பொருள்கள் தரக் குறைவானவை என்று மறைமுகமாக எடுத்துச்

சொல்லித் தென்னாட்டிலே உள்ள ஒன்றிரண்டு தொழிலையும் நசுக்கும் சூழ்ச்சியா என்பதைப் பொதுமக்கள் சிந்திக்கவேண்டுகிறோம்.

வடக்கேயிருந்து வருகிறதாம்—தெற்கே உள்ள முதலாளிகள் இப்படி ஒரு விளம்பரம் போடமுடியுமா? 'காவிரி பாயும் நாட்டில் தயாரித்தது – கண்யமான சரக்கு—தஞ்சையின் நீண்ட கோபுரம் போன்று நீடித்து உழைக்கும்' இப்படி ஒரு விளம்பரம் போட இயலுமா? இயலாது. விளம்பரம் போடுமளவுக்கு இங்கே என்ன பொருள் தயாரிக்கப்படுகிறது?

தோல் ஏற்றுமதி செய்கிறார்கள்—காயவைத்து அப்படியே அனுப்புகிறார்கள்,

வேர்க்கடலை ஏற்றுமதிசெய்கிறார்கள். அப்படியே மாற்றம் ஏதும் செய்யாது—மாவாக அரைக்காது அனுப்புகிறார்கள்.

சேலத்தில் மாக்னசைட் என்னும் கனிப்பொருளை எடுக்கிறார்கள். எவ்விதமாற்றமும் செய்யாது கட்டி கட்டியாக அபபடியே ஏற்றுமதி செய்கிறார்கள்.

இங்கே என்ன இரும்புத் தொழிற்சாலை இருக்கிறதா, அல்லதுமருந்து தொழிற்சாலை இருக்கிறதா?

எல்லாத் தொழில்களையும் வடநாட்டு முதலாளிகள் தங்கள் நாட்டிலேயே ஆரம்பித்து விட்டார்கள்—மூலப்பொருள்கள் இங்கே கிடைக்கிறது என்றால் வடநாட்டார்தெற்கே தொழிற்சாலை கட்டுகிறார்கள்.

பணம் அங்கே குவிந்து கிடக்கிறது. தொழில்கள் வடக்கே மலிந்துவிட்டன. மக்களின் வாழ்வு அங்கே மலர்கிறது.

வடநாட்டார் தெற்கே ஆதிக்கம் செலுத்துவதில் தீவிரமாகிறார்கள். தென்னாட்டுமார்க்கெட்டுகளை கைப்பற்றுகின்றனர்.

தெற்கே உள்ள தொழில்களை அழிக்கத் திட்டமிடுகின்றனர்—நாம் சுரண்டப்படுகிறோம்—தென்னாடு—ஏழைகள் நாடாகிறது—நோயுற்றவர் வாழும் பூமியாகிறது.

வடக்கு ஆரோக்கியமானவர்கள் வாழும் பகுதியாக காங்கிரஸ் ஆட்சியில் உயர்த்தப்படுகிறது. இவைகளைத்தான் அந்தவிளம்பரம் எடுத்துச் சொல்கிறது.

★


'திராவிட நாடு'
பொங்கல் மலர்
விலை ரூ. 1–8–0

இசுமி
இசுகி
டைபீரியஸ்
கிரேக்கஸ்
கெயஸ் கிரேக்கஸ்
★
கண்ணன்
நியுடன்
★
வக்கீல்
வேணுகோபாலர்
குமாரி
குலேபகாவலி
★
அந்தோனிசாமி
பேயாண்டிப்பிள்ளை
★
இவர்கள்
அழைக்கிறார்கள்!
★
பொங்கற்
புது
நாளுக்குப்
பொருத்த
மான
விருந்து!!

★ எந்த ஆண்டும் இல்லாத எழில்!
★ கருத்தோவியங்கள்!
★ வண்ணக் குவியல்கள்!!

உழவர் வாழ வழி காண உயிரை ஈந்த
உடன் பிறந்தார் இருவர்
—பண்டை ரோம்நாட்டு வரலாற்றிலே ஓர் உருக்கமான சம்பவம்

மூடநம்பிக்கை கப்பிக்கொண்டிருந்த போது காட்சி தந்த
குமாரி சூர்யா
—ஜப்பான் நாட்டு மனவள விளக்கக் காதை

ஆராய்ச்சித் திறனை விளக்கிடும்
பழமும் பலனும்
—இங்கிலாந்து நாட்டு அறிவியக்க வரலாறு

பக்தர்களின் போக்கை விளக்க
நங்கை நகைத்தாள்

ஊராள்வோர் போக்கை விளக்க
அறுவடை

சீமான்களுக்கு பக்க மேளம் கொட்டும் போக்கை விளக்க
பல்லிளிக்கும் பரப்பிரம்மம்

தேவ காதைதானு கம்பன் காவியம் என்பதை விளக்க
கம்ப ரசம்

இவை அனைத்தும்
அண்ணாதுரை அளிக்கும்
கருத்தோவியங்கள்.
★

நமது பணி - அறப்போரின் மாண்பு - மனவளர்ச்சி இவைபற்றி விளக்கமளித்து இயக்கத்தில் ஈடுபட வருமாறு இளைஞர் உலகுக்கு விடப்படும் அன்பழைப்பு
திருமுகம்
★

மூன்று கலர்
ஆர்ட் அட்டை
★
120 பக்கங்கள்

இந்த ஆண்டு பொங்கல்மலர்
இல்லந்தோறும்
இருக்கவேண்டிய எழிலேடு!


Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi St, Kancheepuram.